1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.

Telephone: NO. 100


# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

78-ம் புத்தகம் 21-ம் இல. யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு ஆனிமாதம் 4-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## பாத்திமாகிரி ஆனி 7-ந் திகதி

### வருத்தக்காரரை ஆசீர்வதிக்கும் திருச்சடங்கு



யசிந்தாவின் மரணப்படுக்கை

வருத்தக்காரரை ஆசீர்வதிப்பது பற்றி இப்பத்திரிகையில் மூன்று முறை எழுதியிருக்கிறோம். அதனால் எமது உற்சாகமொழிகளால் வருத்தக்காரருக்கு நல்லதைரியமும், நம்பிக்கையும் கொடுக்க முயற்சித்தோம். இம்முறையும் கீழ்வரும் புதுமையினால் இந்தநோக்கத்தைப் பூர்த்திசெய்ய எண்ணுகிறோம். இப்பத்திரிகையிலே சென்றமார்கழி மாதம் நீலப்படையைப்பற்றி வாசகர்களுக்கு எடுத்துக் காட்டினோம். அமெரிக்காவிலே நீலப்படைத் தலைவராகக் குருப்பட்டம்பெறாத ஒருவர் இருக்கிறார். அவர்பெயர் ஜோண் அவ்வேர்ட் என்பதே. தேவ மாதாவின் விசேஷபக்தரான இவர் சென்றவருடம் ஐப்பசி 13-ந்திகதி பாத்திமாபதியிலுள்ள கோவாடீறியாவிற்குச் சென்றார். சென்று அங்கிருக்கும் மகாவந். மேற்றிராணியாரின் விசேஷ சலிகையால் வருத்தக்காரரை ஆசீர்வதிப்பதற்காகத் திவ்விய சற்பிரசாதம் கொண்டுபோகப்படுகிற நேரத்திலே சற்பிரசாதநாதருக்கு மேலாப்புப் பிடித்துச்சென்றார். அந்நேரம் இவர் தமது கண்ணாரக்கண்ட ஓர் புதுமையைப்பற்றிப் பிந்தஆங்கிலத்திலே வெளியிட்டிருக்கின்றார். அப்புதுமையை நாம் தமிழில் மொழிபெயர்த்து இங்கேதருகின்றோம்.

புதுமையாகக் குணமடைந்தவர் போர்த்துக்காலின் தலைநகராகிய லிஸ்பனில் வசிப்பவர். அவர் மிகவுங்கடின பாரிசவாதங்கண்டு வருந்தினார். இந்தவருத்தம் மரணத்திற்கு ஏதுவாயிருந்தது. நோயின்வேதனை தாங்கவாற்றாது அவர் மிகவும் வருந்தினார். பெருங்கவலையுடன் மரணத்தை எதிர்பார்த்திருந்தார். அவருடையதாய் அவரைப் பாத்திமாபதிக்குப் போகும்படியாகப் புத்திசொன்னாள். அதற்கு அவர் சம்மதப்படவில்லை. தேவசித்தமாயிருந்தால் நான் சாகிறதற்கு ஆயத்தமாய் இருக்கிறேனென்று சொன்னார். அதற்குத்தாய்: அப்படியானால், அங்குபோக ஏன் சம்மதிக்கிறாயில்லை? போனால் உனதுசீவியத்தைப் பாவிகளுக்காகப் பரிகாரப்பலியாய் ஒப்புக்கொடுக்கலாமே என்று சொன்னாள். தாய்சொன்ன இந்தவார்த்தைகளினால் கடைசியாக அவர் சம்மதித்தார். பாத்திமாவிலே மனித்சிகிச்சையால் அவருக்குச் சுகம்வருமென்று எவருமே நம்பவில்லை. அவர் பாத்திமாவிலே வருத்தக்காரருக்கான பூசைக்கும், ஆசீர்வாதத்துக்குமாகக் கோவிலுக்குள் கொண்டுபோகப்பட்டார். அன்று மழைபெய்தபடியால் ஆசீர்வாதம் வெளியிலே அருளப்படவில்லை.

லிஸ்பன்பட்டணத்து இந்தவருத்தக்காரர் 1-ம் ஆளாக ஆசீர்வதிக்கப்பட்டார். ஆசீர்வதிக்கப்பட்டதும் எல்லோருமே பிரமிக்கும்படியாக உடனேதானே அற்புதமாக அவர் சுகமடைந்தார். என்றாலும் அவர் தன்னையேநம்பாமல் நடுநடுக்கத்தோடு எழுந்துநின்றார். அவருடையகண்களிலிருந்து கன்னங்கள்வழியாகக் கண்ணீர்வழியத்தொடங்கியது. அவர் தனது வைத்தியரைப்பார்த்து, நான்காண்பது கனவா, அல்லவா என்றுகேட்டார். வைத்தியரும் மறுமொழிசொல்லாமல் ஆச்சரியமேலீட்டால் அழத்தொடங்கினார். அதன்பின் அந்தப்பாக்கியமுள்ள மனிதர் ஒருமணிநேரத்திற்குப்பிறகு மேற்றிராணிஆண்டவரைச் சந்திக்கப்போனார்.

இப்புதுமையைக்கொண்டு நாம் தேவமாதாவின்வல்லமையைக் கண்டுபிடிக்கலாம். நாம் நன்கு அவவை மன்றாடுவோமாகில் எமதுஆத்துமத்திற்கு அவசியமான நன்மைகளைப் பெறுவோம். அவ தமது அதிசயஞானத்தாலே தாம்விரும்புகிறமாதிரி வருத்தக்காரருக்குத் தேகசுகத்தை அல்லது ஆத்துமநம்பிக்கையை-தைரியத்தை அல்லது மனந்திரும்புவரத்தைத் தந்தருளுவா. அவ என்னசெய்தாலும் நாம்நன்றியறிதலோடு அவவுடைய தயவைப்பெற்றுக்கொள்ளவேண்டும். வருகிறஞாயிற்றுக்கிழமை பிற்பகல்4-30 க்குப் பாத்திமாகிரியில் வருத்தக்காரரை ஆசீர்வதிக்கும் திருச்சடங்கு நடைபெறும். மகாவந். எங்கள்மேற்றிராணியாண்டவரே வரவிருந்தார். ஆனல், அவசியகருமநிமித்தம் அவர்வரவு தடைப்படலாயிற்று. அவருக்குப்பதிலாக விக்கார்ஜெனறலாகிய மிகவண. லெக்கூத்தூர் சுவாமியவர்கள் ஆசீர்வாதம் அருளுவார். பாத்திமாகிரிக்கு வரும்அன்பர்களும், வராதஅன்பர்களும் வருத்தக்காரருக்காக மன்றாடுவார்களாக.!

Henri Gesland, O. M. I.
கட்டளைக்குருவர்

## ஆண்டவரே! உமக்குச் சித்த...

பரீஸ்நகரின் சுற்றாடலிலே அழகிய ஓர்சிறுபட்டினம். அங்குளளமக்கள் வருடந்தோறும் திவ்வியநற்கருணைத திருநாளை ஆடம்பர பக்திச்சிறப்பாய்க் கொண்டாடுவார்கள். தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரத்தின்போது அப்பட்டினம்ஓர்சுவர்க்கலோககாட்சி அளித்துநிற்கும். வீதிகள்தோறும், நெடுஞ்சாலைகள்தோறும் பூம்பந்தர்களும், பொன்வேலைப்பாடுகளும், மகரதோரணங்களும், பலவர்ணத் துவசங்களும் பொலிந்துவிளங்கி எல்லோர்க்குமே பக்திப்பரவசம் ஊட்டி, அப்பட்டினமக்கள் சற்பிரசாதநாதரில் கொண்டுள்ள மிக்கானபக்திபற்றுதலைப் பிரதிபலித்துக்கொண்டிருக்கும்.

ஓர்முறை பட்டினமுழுவதும் ஏகோபித்துச் சற்பிரசாதநாதருக்குத் தக்கவரவேற்பு அளிக்கவேண்டுமென ஆர்வங்கொண்டு ஆனதெல்லாம் செய்துகொண்டிருக்கும்வேளை, அங்குபெருந்தனவந்தரான துரைமகன் ஒருவரின் குடும்பத்தினர்மாத்திரம் ஓர்வித சப்தமுமின்றித் துக்கத்தில் ஆழ்ந்திருக்கக் காணப்பட்டனர். கவலையென்னும் கார்மேகம் அன்னாரின் மனையைச் சூழ்ந்துகொண்டிருந்தது. காரணம்என்ன? அக்குடும்பத்தின் குலக்கொழுந்தாய், ஓர் காலம் அவர்கள்சந்ததியை விளக்கப் பிறந்த பதினன்குவயசுப் பாலியன் ஒருவன் கடினநோய்கண்டு அபாயநிலைமையில் கிடந்தமையே.

திவ்வியநற்கருணைத் திருநாளுக்கு முந்தியநாள் நோய் மிகமும்முரமாய் இருக்கும்போது, மூன்றுமணியளவில் ஆலயமணிகள் ஆர்ப்பரிக்கத்தொடங்கின. அப்போது பாயும்படுக்கையுமாய்க் கிடந்தபாலியன் தாயை விழித்து: " அம்மா, இதென்ன சபதம்? " என்றான்.

" தம்பி, நாளைக்குத் திருநாள் அல்லவா? அதற்கு ஆயத்தமாகத்தான் மணியடிக்கிறார்கள் "

" நாளைக்கு என்ன திருநாள் அம்மா? "

" தம்பி! நாளைக்குத்தான் திவ்வியநற்கருணைத் திருநாளென்று உனக்குத் தெரியாதா? "

" திவ்வியநற்கருணைத் திருநாளா? என்ன அருமையான திருநாள்! போனவருஷம் இத்தத்திருநாளன்று நான் நல்ல சுகத்துடன் இருந்தேனே; திவ்வியநற்கருணை சுற்றுப்பிரகாரமாய் வ்ரும்போது, ஏனையபிள்ளைகளுடன் நானும் சற்பிரசாதநாதருக்கு மலர்தூவிக் கொண்டு போனேனே; இந்த வருஷம் அம்மா! படுக்கையைவிட்டுஎழுந்திருக்கமுதலாய் எனக்குச்சகதியில்லையே " என்று சொன்னபோது, அவன்கண்கள்இரண்டும்கலங்கி இரண்டொரு கண்ணீர்த்துளிகள் அவன்கன்னத்தின்வழியாய் தலையணையில் போய் வீழ்ந்தன. அதன்மேல் சிறிதுவேளை அமைதியாயிருந்த பாலியன் தந்தையை நோக்கி: " அப்பா! நான்உங்களிடம் ஓர் காரியம் கேட்கவேண்டும்; சற்பிரசாத சுற்றுப்பிரகாரத்தைப் பார்க்க எனக்குமிகவும் ஆசையாய் இருக்கிறது; நீங்கள்என்னைத் தூக்கிக்கொண்டுபோய் யன்னலண்டை விடமாட்டீர்களா! "

# பாலிய குற்றவாளிகளின் பெற்றோரா?

[முன்தொடர்ச்சி]

## சுயாதிபத்தியபெற்றோர்

இப்பிரிவைச்சேர்ந்த பெற்றோரின் கோட்பாடு யாதெனில், பிள்ளைகள் பிறப்பிலிருந்தே கெட்டநாட்ட முடையவர்களாய் இருப்பதனால் அவர்களைத் திருத்துவதற்குக் கண்டிப்பே பாவிக்க வேண்டிய ஆயுதமென எண்ணுகிறார்கள். பிள்ளைகள்செய்யும் எவ்வித சிறிய குற்றமும் அவர்களுக்குப் பாரதூரமானதாய்த்தோன்றும். அவர்கள் சிறுகுற்றங்களுக்கும் பிள்ளைகளைத் தண்டிப்பார்கள். பயத்தினால் அப்பிள்ளைகளும் ஓர்வித எதிர்ப்புமின்றியே அவர்களுக்கு அமைச்சல் காண்பிப்பார்கள். ஆனால், காலஞ்செல்லச்செல்ல இவ்வித பணிவான அமைச்சல் மாறிக்கீழ்ப்படியாமை என்னும் துட்டகுணம் பிள்ளைகளிற் தலைகாட்டும். பெற்றோர் மேல் உள்ளநட்பும், அமைச்சலும் அப்போது வெறுப்பாயும், துரோதமாயும் மாறிவிடும். இப்படியான நிலையை அடைந்ததும் பிள்ளைகளுக்கு வீடேவெறுப்பாக, பெற்றோரே கசப்பாயிருப்பார். பிள்ளைகள் தங்கள் வீட்டைவிட்டும், பெற்றோரைவிட்டும் பிரிந்துபோய்ச் சுயேச்சையாய்த்திரியவும் மனங்கொள்வர். இதுவே அளவுக்குமிஞ்சிய அதிகாரத்தால் ஏற்படும்தீமை. மேலேஎடுத்துக் கூறிய ஐந்துவிதமான பெற்றோரும் தங்கள் கடமையை உதாசீனம் செய்வதாலே பிள்ளைகள் தகுந்தமுறையாய் வளர்க்கப்படாது கெட்டலைந்து போவதற்குக் காரணராயிருக்கின்றனர். பிள்ளைகள் பிற்காலத்தில் உத்தமராக வரவேண்டுமென விரும்புகிறபெற்றோர் மூன்று பிரதானமானவிதிகளை அனுட்டித்து வருதல் நன்று. அவையாவன : முறையான அதிகாரம், பிள்ளைகள்—பெற்றோர்-அன்பு, தாய் தந்தையரின் முன்மாதிரிகை.

## முறையான அதிகாரம்

பெற்றோர் தங்கள் அதிகாரத்தைப் பிள்ளைகள்பால் ஏற்றவாறு பாவித்தல் அவசியம். இளமையிலே அமைச்சலாய்நடக்கப் பழக்கப்பட்டபிள்ளை பிற்காலத்தில் சன்மார்க்கத்துக்கும், சமூகவாழ்க்கைக்கும், அரசியல்முறைக்கும் ஏற்பநடப்பான். அப்படியின்றித் தாறுமாறாக நடப்பானேயாகில் நீதிஸ்தலத்தில் குற்றம்சாட்டப்பட்டுத் தண்டனை பெறுவான். அதிகாரம்என்பதில் சிட்சையும்அடங்கும். சிட்சைஎன்பது கிரமமானமுறையில் நடக்கப்பழக்குவது. இவ்விதம் பழக்குபவர்கள் போதிய அநுபவம் உடையோராயும், வயதில்முதிர்ந்தோராயும் இருப்பதுநலம். தண்டிப்பும் இதில் அடங்கும். பிள்ளையின்போக்கை அறிந்து தின்மையென நாம் எண்ணுவதைத் தடுப்பதற்குத் தண்டிப்பே கடைசியாகப் பாவிக்கவேண்டியகருமமாய் இருத்தல் அவசியம். ஆனால், பிள்ளைகளின் உற்சாகத்தையும், முன்னேற்றத்தையும் பாதியாதிருக்கவேண்டும். பிள்ளை பிற்காலத்தில் தனித்தே வாழவேண்டியவனாய் இருப்பதால் அவனை ஓர் அடிமைபோல் அடக்கியாள்வது மிகவும்கெடுதலாய் முடிவதுடன் அவனை ஒரு அசமந்தனாக்கியும் விடும்.

## பிள்ளைகள்-பெற்றோர்-அன்பு

அன்பு என்னும் பாசம்ஒன்றே பெற்றோரையும், பிள்ளைகளையும் இணைக்கும் "வல்லபம் பொருந்தியது." அதை விபரிக்க அர்ச். பாவுலுவானவர் கூறுவதுயாதெனில், "அன்புஎன்பது பொறுதியுள்ளது, இரக்கமானது. அன்புக்குக் காய்மகாரமில்லை, மூர்க்கமில்லை, வீணபாராட்டில்லை, பேராசையுமில்லை. அதற்குத் தன்னலப்பிரியமில்லை. அது கேடு நினைப்பதுமில்லை. கோபத்தால் தூண்டப்படுவதுமில்லை. அது உண்மையில் அக்களிப்பும், நன்னம்பிக்கையும், குறைகளைத் தாங்குந்தன்மையும், எக்காரியத்திலும் களங்கமற்றவிசுவாசமும் உள்ளதாயே இருக்கும்" என்பதே. நாம் எமதுபிள்ளைகளுக்கு எம்மாலானமட்டும் அன்பைக் காட்டவேண்டும். அதையே அவர்கள் விரும்புவர். தாய்க்கும், பிள்ளைக்கும், தகப்பனுக்கும் அந்நியோன்னியநட்பு நிலைத்திருக்கவேண்டியது அவசியம். பெற்றோர் தமது பிள்ளைகளின் முயற்சிகள்யாவற்றிலும் பங்குபற்றவேணடும். இவ்விதம்செய்வதால் பிள்ளைகளுக்குப் பெற்றோரில் விசுவாசம்ஏற்படுவதல்லாமல், ஓர்வித உற்சாகமும்ஏற்பட ஏதுவாயிருக்கும்.

## தாய்-தந்தையரின்-முன்மாதிரிகை

பிள்ளைகள் சிறுபாரயந்தொட்டுத் தாய்தந்தையரின் நட்பையும், ஒருவரோடொருவர் நடந்துவரும் முறையையும், அவர்களின் தேவபற்றுதலையும் அவதானித்தே வருகின்றார்கள். தாய்தந்தையர் ஒற்றுமையாக வாழ்க்கைநடத்துவதைக் காணும் பிள்ளைகள் தாங்களும் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றப் பிரயாசப்படுவார்கள். ஆனால், வீட்டிலே தாய்க்கும், தகப்பனுக்குமிடையே சதாசண்டையாய் இருப்பதைக்காணும் பிள்ளைக்குச் செய்வதுஇன்னதென அறியாது திகைப்புஏற்படுகின்றது. சில வேளைகளில் பெற்றோர்மேலுள்ள விசுவாசம் குன்றியகாரணத்தால் தாயைப் பகைத்துத் தகப்பனுடன்சேருவான். அல்லது தகப்பனைப்பகைத்துத் தாயுடன்சேருவான். இவ்வித மனோவிகாரம் ஏற்படுவதற்குத் தாய்தகப்பனே காரணமாகின்றனர். தாய்மாரின் கடமைகள் யாது? பிள்ளைகளைப் பெறுவதும், வளர்ப்பதும், கல்வியூட்டுவதும், தேவபக்தியிலும், கிறீஸ்துவசீவியத்திலும்வளரப்பழக்குவதுமே. தகப்பனின் கடமைகள்யாவை? தனது மனைவிமக்களைத் தன்னாலானமட்டும் பிரயாசப்பட்டு உழைத்துச் சந்தோஷமாய்ச் சீவிக்கவைப்பதும், ஓர் உத்தம கிறீஸ்தவனாய்ச் சீவிப்பதுமே. இவ்விதம் அந்நியோன்னியமாய்ச் சீவியம்நடத்தும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் உத்தமராயும், வேதவைராக்கியமுள்ள கிறீஸ்தவர்களாயும் பிற்காலத்தில் விளங்குவர். ஆனால், இப்போது நடப்பதைச் சற்றுக்கவனிப்போம். அநேக குடும்பங்களில் தாயும், தகப்பனும் உத்தியோகங்களில் அமர்ந்திருப்பதால் பிள்ளைகளை வளர்க்கும்பொறுப்பில் கூடியபகுதி செவிலித்தாய் மாரிலேயே விடப்படுகின்றது. அதனால் அவர்களின் பிரதிபிம்பங்களாகவே பிள்ளைகள்மாறிவிடுவர். நல்லகுணசாலியான செவிலித்தாயானால் பிள்ளைகள் அவளிடமுள்ள நற்குணங்கள் அமையப்பெறுவர். தாறுமாறானவளானால் பிள்ளைகளும் அவ்விதமேயாவர். இவ்விதம் நாகரீக முறையெனப்படும் இந்நவீனமுறையும் பிள்ளைகள் கெட்டுப்போவதற்குக் காரணமாயிருக்கின்றது. இவ்விதம் தாயும், தகப்பனும் உத்தியோக பதவிகளில் ஈடுபட்டிருக்கும் குடும்பங்களிலே சமாதானவாழ்க்கை நிலவுவது மிகவும்குறைவு. அதற்கு அடிப்படையாயுள்ள காரணம்யாதென ஆராய்வோமேயானால் மனைவியும், புருஷனும் சமஅந்தஸ்தில் இருப்பதால் வீட்டிலே புருஷனுக்கு இயற்கையாயிருக்கவேண்டிய அதிகாரம் துண்டிக்கப்படுகின்றது. மனைவியிடம் பெறவேண்டிய மதிப்பும் குறைவாகின்றது. இவ்விதம் சிறிதுகாலஞ்செல்ல இருபாலார்க்குமிடையே வாக்குவாதம் ஏற்படுவதும்வழக்கம். இவ்வித தகரா

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# அர்ச். அந்தோனியார் திருநாள்

## பாஷையூர்

இத்திருநாள் வழமைப்பிரகாரம் ஆனிமாசம் 1-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 13-ந் திகதி அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபசுற்றுப்பிரகாரத்துடன் முடிவடையும்.

ஆனி 1—11-ம் திகதிகளில் மாலை 7 மணிக்கு மாலைஆராதனை.

ஆனி 12-ம் திகதி காலை 6-30 மணிக்குப் பாடற்பூசை.
பி. ப. 4-15 மணிக்குச் செபமாலை, வேஸ்பர் திவ்வியசற்பிரசாத சுற்றுப்பிரகாரம், ஆசீர்வாதம், அர்ச். அந்தோனியார் திருச்சுரூப எழுந்தேற்றம்.

ஆனி 13-ம் திகதி காலை 7-00 மணிக்குப் பெரியபாடற்பூசை.
மாலை 4-30 மணிக்குச் செபமாலை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், ஆசீர்வாதம்.

கட்டளைக்குரவர்
பாஷையூர்

# இலக்கியப் பரிசுகள் 1953-54

## தூத்துக்குடி தமிழ் இலக்கியக்கழகம்

**1954-ம் ஆண்டில் கீழ்க்கண்ட பரிசுகளை வழங்கும்.**

**1. நல்லூர் சுவாமி. ஞானப்பிரகாசர் ஆராய்ச்சிப் பரிசு**

1. கீழ்க்கண்ட ஏதேனும் ஒருபொருள்பற்றி முதல்நூலாக எழுதப்படும் சிறந்தஆராய்ச்சி நூலுக்கு ரூபாய்ஆயிரம் பரிசு அளிக்கப்படும்.

(அ) தமிழ் இலக்கியத்துக்குக் கத்தோலிக்கர் செய்ததொண்டு.

(ஆ) அந்தோனிக்குட்டி அண்ணாவியாரின் வாழ்க்கைவரலாறும், நூல்களும்.

(இ) சவரிராயலு நாயக்கரின்வாழ்க்கைவரலாறும், நூல்களும்.

(ஈ) நல்லூர் சுவாமி.ஞானப்பிரகாசரின் வாழ்க்கைவரலாறும், நூல்களும்.

(உ) வேதநாயகம்பிள்ளையின் வாழ்க்கைவரலாறும், நூல்களும்

2. இவ்வாராய்ச்சிநூல் இருபத்தைந்து வரிகள்கொண்ட 250 பக்கங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

**2. கத்தோலிக்க கதைநூலுக்கு முனிசீப் வேதநாயகம் பிள்ளைபரிசு.**

1. ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி மொழிகளில் முதல்நூலாய் எழுதப்பெற்றுள்ள தலைசிறந்த கதைநூல் ஒன்றின் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கு ரூபாய் ஐந்நூறு பரிசுஅளிக்கப்படும்.

**3. கத்தோலிக்க திருத்தொண்டர் வரலாற்றுக்கு அர்ச். அருளானந்தர் பரிசு.**

1. கீழ்த்திசைமக்கள் விரும்பக்கூடிய பத்து அர்ச்சியசிஷ்டவர்களின் வரலாறுஅடங்கிய சிறந்தநூல் ஒன்றுக்கு ரூபாய் ஐந்நூறு பரிசுஅளிக்கப்படும்.

அர்ச்சியசிஷ்டவர்களைத் தேர்ந்தெடுத்தல் எழுத்தாளர் பொறுப்பு.

2. கையெழுத்துப்பிரதி, குறைந்தது பக்கத்துக்கு இருபத்தைந்து வரிகள்கொண்ட 400 பக்கங்கள் உடையதாய் இருத்தல் வேண்டும்.

### பொதுவிதிகள்

1. கையெழுத்துப்பிரதிகள் தூத்துக்குடி தமிழ்இலக்கியக் கழகச் செயலாளருக்கு 1954 ஜூன் 30-ம்நாளுக்குமுன் அனுப்பப்படவேண்டும்.

2. குறிப்பிட்ட ஒருபரிசுக்கு அனுப்பப்பட்ட கையெழுத்துப் பிரதிகளில் எதுவும் குறைந்தஅளவு தகுதியேனும் பெறவில்லையாயின் அப்பரிசு கொடுக்கப்படமாட்டாது.

3. பரிசுபெற்ற கையெழுத்துப் பிரதியின் எல்லாஉரிமைகளும் தமிழ்இலக்கியக் கழகத்திற்கே.

4. பரிசு 1954 டிசம்பர்மாதம் வழங்கப்படும்.

5. எந்தச்சமயத்தவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

தமிழ் இலக்கியக்கழகம்,
தூத்துக்குடி.

சேவியர் தனிநாயகம்
செயலாளர்

— யப்பான்வரையிலே நடைபெற்றுவந்த ஜேர்மனிய, இத்தாலிய கப்பற்போக்குவரத்துச்சேவை இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமான காலமுதல் நிறுத்தப்பட்டிருந்தது. வருகிற ஆடி, ஆவணியிலே இத்தாலிய, ஜேர்மனிய கப்பல்கள் இந்தத் தூரகிழக்குக் கப்பற் போக்குவரத்துச் சேவையைத் திரும்பவும் தொடக்கிநடத்த விருக்கின்றன.

— மகாராணியாரின் முடிசூட்டுவிழாத் தரிசகர்களாய்த் தூரமான நாடுகளிலிருந்து லண்டன் நகரிலுள்ள இரு விமான நிலையங்களிலும், இங்கிலாந்தின் தெற்குக் கரையிலுள்ள அத்திலாந்திக் துறைமுகமாகிய சதாம்ரனிலும் தினமும் பதினாயிரம்பேர் வீதம் வந்து இறங்கிக் கொண்டிருப்பதாகச் சென்ற வியாழக்கிழமை தந்திச்சமாச்சாரம் தெரிவித்தது.

# கத்தோலிக்க சமாச்சாரம்

## முதல்வெள்ளிக்கு முதனுள்

மாதந்தோறும் முதல்வெள்ளிக்கிழமைக்கு முதனுளன்று ஆர்ஜென்ரீனு தேசத்திலுள்ள 27 வாஞெலி நிலையங்கள் ஒவ்வோர் ஐந்துநிமிஷத்திற்கும் ஓர்தரம் முதல்வெள்ளிவருவதை யிட்டுப் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகுமாறு செய்திகேட்பாருக்கெல்லாம் ஞாபகப்படுத்துகின்றன. ரெலிவிஷன்மூலமும் இது அறிவிக்கப்படுகிறது. சாதாரண கத்தோலிக்கரின் கோஷ்டிஒன்று சென்றவருடம் புவெனேஸ் அயேர்ஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் கொபெல்லோ ஆண்டவரின் ஆதரவோடு இவ்விதம் அறிவிக்குமாறு ஆறுவாஞெலி நிலையங்களை ஒழுங்குபடுத்தியது. கார்த்திகையோடு அவற்றின் தொகை பத்தாகி இப்போது இருபத்தேழாகிவிட்டது.

## சுரூபங்கள் செய்தவன்

இரும்புத்திரை நாடுகளில்ஒன்ருய்க் கம்யூனிஸ்த ஆட்சியின் கீழ் இருந்துவருகின்ற செக்கோசிலவாகியநாட்டின் புதியஜனுதிபதியாக வந்திருக்கும் அன்ரஞின் சபொரொக்கி என்பவன் ஓர்காலம் ஒரு கற்சிற்பியாயிருந்து பிறேக்நகரிலுள்ள அர்ச். வீத்துஸின் ஆசனக்கோவிலுக்கு அர்ச்சியசிஷ்டர்களின் சுரூபங்கள் செய்துகொடுத்தவன். இவன் சென்றமகாயுத்தம் நடந்தகாலத்திலே சிலகாலம் நாஸியசிறைமுகாம் ஒன்றில் கைதியாக இருந்துவந்தான். அதிலே இவனதுஉடன்கைதிகளில் ஒருவராகப் பீறன் அதிமேற்றிராணியாரும் இருந்தார். யுத்தம்முடிந்தபின் அதிமேற்றிராணியாரின் தேசாபிமானத்தைச் சபொரொக்கி பகிரங்கமாகப் புகழ்ந்துகொண்டான். ஆனல், இன்ரே பீறன் அதிமேற்றிராணியாண்டவர் அந்நாட்டுக் கம்யூனிஸ்தர்களால் கைதுசெய்யப்பெற்று நெடுங்காலமாகச் சிறைவாசஞ் செய்துவருகின்ருர்.

## ருஷியாவில் சிறையிருப்போர்

ஓர்போலிஷ் அதிமேற்றிராணியாரும், அநேகமேற்றிராணிமாரும், நூற்றுக்கணக்கான குருமாரும் ருஷியாவில் இன்னுமேசிறையிருந்து வருகின்ருர்கள். கிழக்குப் போலாந்திலிருந்து லுவோநகரின் சிலிப்பி அதிமேற்றிராணியாரும், அநேக மேற்றிராணிமாரும் கைதுசெய்யப்பெற்று அப்போது சைபீரியாவுக்கு அனுப்பிவைக்கப் பட்டார்கள். இவர்கள் சீவனேடிருக்கிருர்களா என்பதுபற்றிய செய்தியே கிடையாது. போலிஷ்அரசாங்கத்தின் கடைசியானபிரதிநிதியும், மறைமுகமாக எதிர்க்கும் கட்சியின் தலைவருமாயிருந்து 1945-ம் ஆண்டு எட்டுவருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்ற ஜே. ஜன்கோஸ்கிஅவர்களும் சிறைச்சாலையில் இருந்து வருகின்ருர். மஸ்கோவின் டக்றர்மார்ஒன்பதுபேர்மீதும் கையாளப்பட்ட அதேசோவியற் தந்திரோபாயங்களே இவர்கள் மீதும் பிரயோகிக்கப்பட்டன. அதனல் கிறெம்லினின் வார்த்தைகளிலே மேற்குஐரோப்பிய நாடுகள் நம்பிக்கை வைக்க வேண்டுமானல் அந்தடக்றர்மாரைப்போலவே இவர்களும் விடுதலைசெய்யப்பட வேண்டியவர்கள்.

## வேதசாட்சிகளாக்க விரும்பவில்லை

வடகோறியாவிலே சிறைவைக்கப்பட்டிருந்த சுஞ்சன்நகரின் அப்போஸ்தலிக்க தலைவரான தோமஸ் குயின்லன்மேற்றிராணியார் மூன்றுவருட காலம் கம்யூனிஸ்தரால் சிறைவைக்கப்பட்டிருந்து, கடைசியாக விடுதலையடைந்து மூன்று வாரங்களின்முன் தமது சுவநாடாகிய அயர்லாந்துபோய்ச் சேர்ந்தபோது, அங்கு டபிளின்நகர் விமானநிலையத்திலே அந்நாட்டின் அரசாங்கத்தின்பேரால் உதவிப்பிரதமரும், வெளிநாட்டு மந்திரியாரும் அவரை வரவேற்றுகின்ருர்கள். அவ்வேளை நகரமேயரும், இருமேற்றிராணிமாரும், அநேககுருமாரும், பெருந்திரளான மக்களும் சமூகமாயிருந்தார்கள். அங்கு குயின்லன் மேற்றிராணியார் பேசியபோது: "வடகோறியாவிலே சிறைவைக்கப்பட்டிருந்த மிஷனரிமார் நியாயமாகநடத்தப்பட்டார்கள்; ஏனெனில், அவர்களை வேதசாட்சிகளாக்கக் கம்யூனிஸ்தர்கள்விரும்பவில்லை; வேதத்தை மறுதலிக்கும்படியாய் உங்களைக் கேட்கமாட்டோம் என்றுதானும் அவர்கள் கூறிஞர்கள்" எனத் தெரிவித்திருக்கின்ருர்.

## பேராசிரியரின் பொன்மதி

பேர்மிங்காம் நகரிலுள்ள அர்ச். பிலிப்புவின் பிரதமகலாசாலையிலே பேராசிரியர் தோமஸ் பொட்கின் அவர்கள் சமீபத்திலே மாணவர்களுக்குப் பரிசுகள்வழங்கியபின்னர் கலாசாலையைவிட்டு வெளியேறுகின்ற மாணவர்களுக்குப் பின்வருமாறு பொன்மதி புகன்ருர்: "நம்முளே பெரும்பான்மையோர் செய்கின்ற ஓர்பெரும் பிழை யாதெனில், மிகஅதிகமான புதினப்பத்திரிகைகளை வாசிப்பதாகும். உலகம் நல்ல புத்தகங்களால் நிறைந்துபோயிருக்கிறது. புத்தகங்களும் மலிவாயிருக்கின்றன. எமது வீடுகளிலே நாம் அனுமதிக்கின்ற புதினப்பத்திரிகைகள் மட்டில் நாம் மிகுந்தகவனம் எடுக்கவேண்டும். கெட்டபத்திரிகைகள் இந்நாட்டின்மனத்தை நஞ்சூட்டிவிடுகின்ற காரியங்களில்ஒன்ருகும். மிகச்சிறந்த கத்தோலிக்கபத்திரிகைகள் சிலவற்றை நாம் கொண்டிருக்கிறோம். இவைகள் அம்மாதிரியான பத்திரிகைகளிலும் எவ்வளவோசிறந்தன. நீங்கள் வெளியுலகில் செல்லும்போது உங்கள் நாளாந்த செபங்களைச் சொல்ல மறந்துவிட வேண்டாம்" என்பதே.

# சமாதானத்தை ஆசிக்கின்றதா ?

1951-ம் ஆண்டு ஆடிமாதம் 11-ந் திகதியன்று தொடங்கிய கோறியாப் போர்நிறுத்தப் பேச்சு ஏறக்குறைய 700 தினங்களாக நடந்திருக்கிறது. இந்தக்காலத்திலே ஐக்கியநாடுகளின் பிரதிநிதிகளும், கம்யூனிஸ்த பிரதிநிதிகளும் சுமார் 300 தடவைகூடிப் பேசியிருக்கிருர்கள். ஒவ்வோர்தடவையும் சமரசம் இதோவந்துவிட்டதெனத் தோன்றும்போது, கம்யூனிஸ்தர்கள் குழப்பிக்கொண்டு போயிருக்கிருர்கள். ஜனதிபதி ஐஸன்ஹாவர் சொல்லியதுபோலக் கம்யூனிஸ்தர்களுக்குச் சமாதானத்தில்விருப்பம் இருக்கிறதுஎன்ருல் அதற்கு அத்தாட்சிவேண்டும்; அந்த அத்தாட்சியை அவர்கள் கோறியாவில் காட்டுவார்களா? கேள்வி இதுதான்.

இன்று கோறியாப் போர்நிறுத்தப் பேச்சில் முட்டுக்கட்டைஏற்பட்டிருப்பது யுத்தகைதிகளை மாற்றுவதிற்தான். மொத்தமாக 48,500 கம்யூனிஸ்த போர்வீரர்கள் — இவர்களில் 14,500பேர்சீனர். 34000 பேர் வடகோரியர் — இரும்புத்திரைக்குத் திரும்பிச் செலலப் பலவந்தம்செய்யக் கூடாது என்று ஐ. நாடுகளின்பக்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. கைதிகள் மனிதர்கள. அவர்களைப்பலவந்தமாக—அவர்களின் விருப்பத்துக்குமாருகத் திருப்பி அனுப்புவது மனிததர்மத்துக்கு—மனிதனின் விடுதலை உரிமைக்கு முரணுகுமென்று ஐ. நாடுகளின்பக்கமாக வாதிக்கப்படுகிறது.

பான்முன்ஜோமில் நடக்கும் பேச்சானது ஆஸ்திரியாவிஷயமாகச் சுமார் எட்டு ஆண்டுகளாய்ச் சோவியற் அரசு ஒத்துழையாமல் இழுத்தடித்து வருவதையும், யப்பானிய சமாதான உடன்படிக்கைபற்றிச் சோவியற்அரசு சுமார்ஐந்து ஆண்டுகளாக இழுத்தடித்ததையும் ஞாபகமூட்டுகிறது. சர்வதேச சிக்கல்கள் எதிலும்சரி, அன்றுபோல்இன்றும் கண்ணியமான உடன்படிக்கைக்குவர ஐ. நாடுகளும், குறிப்பாக ஐக்கிய அமெரிக்கதேசமும் தயாராயிருக்கின்றன.

சென்ற 25-ந் திகதி ஐ. நாடுகளின் பிரதிநிதிகளும், கம்யூனிஸ்த பிரதிநிதிகளும் திரும்பவும்கூடிஞர்கள். எட்டுநாள் ஓய்வுக்குப்பிறகு இந்தக் கூட்டம் நடந்தது. யுத்தகைதிகளை மாற்றுவதுபற்றிக் கோறியாவில் ஐ. நாடுகளுக்குப் படைகொடுத்து உதவிவருகின்ற நேசதேசங்களுடன் கலந்து பேசியபிறகுதான் ஐ. நாடுகளின் பிரதிநிதிகள் புதியயோசனைகளைச் சமர்ப்பித்தனர். இரண்டுமணிநேரம் நடந்த இந்தக்கூட்டம் மறுபடி ஆனிமாதம் 1-ந் திகதி காலை கூடுவதென்று கலைந்தது. கோறியாப் போர்நிறுத்தத்துக்கு முட்டுக்கட்டையாயிருப்பது கைதிகள்பிரச்சினையே. கம்யூனிஸ்தநாடுகளுக்குத் திரும்பிச் செல்ல மறுக்கும் யுத்தகைதிகளைக் கட்டாயப்படுத்தக்கூடாது. என்பது ஐ. நாடுகளின்நியாயம்

யுத்தம்நின்றபிறகு அரசியல் மகாநாடு ஒன்றினிடம், அப்படித் திரும்பமறுக்கும் யுத்தகைதிகளின் முடிவை இறுதியாகநிர்ணயிக்க விடவேண்டுமெனக் கம்யூனிஸ்தர்கள் வாதிக்கின்றனர்.

அதற்கு ஐக்கியநாடுகளின் பக்கமாகச் சுட்டிக்காட்டப்படுவது யாதெனின்: அந்த அரசியல் மகாநாடு உடன்பாடுகாணும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஒருஉத்தரவாதமும் கம்யூனிஸ்தர்கள் அளிக்கவில்லை. (கம்யூனிஸ்தர்களின் பழைய போக்கைஒட்டியே இந்தஉத்தரவாதம் தேவைப்படுகிறது.) அப்படிஉத்தரவாதம் இல்லை என்ருல், இந்தயுத்தகைதிகள் காலவரையறையின்றிக் கைதிகளாகவே இருக்கவேண்டும், அல்லது விருப்பத்துக்குமாருகத் திரும்ப வேண்டும்என்ற நிர்ப்பந்தமான நிலைமையிலே சிக்கித்தவிப்பார்கள் என்பதை ஐ. நாடுகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகிருர்கள்.

நிற்க, மஸ்கோநகர எல்லைப்புறத்திலே பல்லாயிரம் யுத்தகைதிகளுக்கு ஒருபாடசாலை நடக்கிறது. அங்கே ருஷியகம்யூனிஸ்த நிபுணர்கள் அவர்களுக்குச் சதிவேலைகளில் பயிற்சி அளிக்கிருர்கள். அதிலே "சித்தி" பெறுகிறவர்களுக்குப் படித்த பாடத்தைச் செய்து காண்பிக்கும்படியாக அவரவர் சொந்த நாடுகளுக்கு விடுதலையோடு திரும்பி அனுப்பப்படுவார்கள்.

சோவியற்நாடே மகாப்பெரிய சிறை. அதிலே பெருஞ்சிறை அடிமைத் தொழில் முகாம். அங்குதான் யுத்தகைதிகள்—பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் அகப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள். (இச்சந்தர்ப்பத்தில் யப்பானிய யுத்தகைதிகளில் ஆயிரக்கணக்கானேரையும், அதேபோல யுத்தத்தில் சிறைப்பட்ட ஜேர்மனியர்களையும் அவரவர் தாய்நாடுகளுக்கு அனுப்பாது சோவியற்அரசு தேக்கிவைத்துக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலைமையிலே ஒருகைதி தப்பவேண்டுமானல், சோவியற்சதிக்கு உடந்தையாகவே வெளியேறவேண்டும்.

யப்பானிய, இத்தாலிய, ஜேர்மனிய அரசாங்கங்கள் தத்தம் நாடுகளின் யுத்தகைதிகளைத் திருப்பிஅனுப்பும்படி கேட்டிருப்பதற்குச் சோவியற்அரசாங்கம் இன்றளவும் ஒருபதிலும் சொல்லாமல்இருக்கிறது. இந்த அரசாங்கங்கள் அவ்வாறு கேட்டுச் சரியாக மூன்று வருடங்கள் ஆகின்றன. இரண்டாவது மகா யுத்தத்தின் போது 70,00,000 பேரைச் சோவியற் அரசு கைதுசெய்ததாகத் தெரிவித்தது. அவர்களில் 43,16,000 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மீதியான 26,84,000 பேரும் என்ன ஆனர்கள்? பதிலேஇல்லை.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

சத்தியவேத

# பாதுகாவலன்

1953-ம் ஆண்டு
ஆனி மாதம் 4-ந் திகதி


## மணிமுடி சூடினார்

மாட்சிமைதங்கிய இரண்டாவது எலிசபெத் மகாராணியாரின் மகுடதாரண வைபவமானது, சென்ற 2-ந் திகதி செவ்வாயன்று லண்டன்மாநகரிலே, 'வெஸ்ற்மினிஸ்றர் அபெ' ஆலயத்திலே, உலகின் எண்டிசாமுகமும் இருந்துபோனபட்டவர்த்தனர்கள், மகுடவர்த்தனர்கள், அரசிளங்குமாரர்கள், பிரதமர்கள், ஸ்தானீகர்கள், தரிசகர்கள், அரசியற்தலைவர்கள், மந்திரிமார்கள் முதலானோர் சனசமுத்திரம்போலத் தேங்கியிருந்த சமுகத்திலே கண்கொள்ளாக்காட்சியாய், என்றுமில்லாப் பெருமிதமாட்சியாய், சரித்திரப்பெருமைவாய்ந்த ஓர் மகாசம்பவமாய், சமபிரதாய முறைப்படியே மங்கலகரமாக நிறைவேறியது. இந்த வைபவமானது பிரித்தானிய சனநாயக ஆட்சியின் பெருஞ்சிறப்புக்கும், அஃது உலகிலுள்ள பல நாடுகளிடையே கொண்டுள்ள மாட்சிச் சிறப்புக்கும் போந்தவோர் அத்தாட்சியாயிற்று. பிரித்தானிய இராச்சியத்திலிருந்தும், அதன் சாம்பிராச்சிய—குடியேற்ற நாடுகளிலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும பிரபலஸ்தர்களாயும், பொதுமக்களாயும் அத்துணை பிரமாண்டமான சனக்குழாம் பிரசன்னமாயிருக்க, அத்துணை பெரும்ஆடம்பரமாக நடந்தேறியவைகளைக் கவனிக்கும் போது, இரண்டாவது எலிசபெத் மகாராணியாரின் மகுடாபிஷேகத்தைப்போன்று மகத்தான வைபவம் ஒன்று இதுவரை எங்காவது நடந்திருக்குமோ? இனிமேல் எங்காவது நடக்குமோ? வென்றுதானும் சிந்திக்கவேண்டிய ஓர் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. ஆம், எலிசபெத் மகாராணியார் அர்ச். எட்வாட்அரசரின் புனித சிம்மாசனத்தமர்ந்து, அர்ச். எட்வாட் அரசரின் மணிமுடி புனைந்த மகாவைபவமானது நிகழும் இருபதாம் நூற்றாண்டின் சரித்திரப்பிரசித்திபெற்ற மகா சம்பவமாயிற்றெனில் மிகையாகாது. அத்தாலே சாதிபேதம், தேசபேதம், சமயபேதமில்லாது அகிலமுழுவதுமே உண்டாயிருக்கும் அகமகிழ்ச்சியோ பெரிது! இன்றையஉலகின் முடியரசுகளுக்கெல்லாம் ஓர் முடியரசாய், சனநாயக அரசுகளுக்கெல்லாம் நடுநாயகமாய்விளங்குகின்ற பிரித்தானிய சனநாயக முடியரசின் தனிநாயகமாய்த் திகழும் மகாராணியார் தமது செங்கோல்சிறக்க, மங்காப்புகழுடன் பல்லாண்டுஆட்சிசெய்துவர வேண்டுமென ஆசிக்கின்ற மக்கள் காண்பிக்கும் நன்மனமோ பெரிது! தமக்கு முன்னிருந்த எந்தஒரு மகாராசரோ மகாராணியோ பெற்றிருக்க மாட்டார்களென்று சொல்லக்கூடியவகையிலே மிகப்பெருந்தொகையான மக்களின் இதயங்களைக் கொள்ளைகொண்டுள்ள மகாராணியாரிலே அவர்கள் கொண்டுள்ள அன்போ மிகப்பெரிது! அங்ஙனமாக, இலங்கை மக்களும் அவரது மகுடாபிஷேக விஷயமாய் மிகுந்த அபிமானம் காண்பிக்க வேண்டியது ஏன்? ஏனெனில், சரித்திரத்தில் முதன்முறையாக, பிரித்தானிய அரசசிம்மாசனத்தை வகிக்கிறஅரசியே விசேஷ உரிமைப்பட்டத்தைக் கொண்டு நமது இராணியாகவும் இருக்கின்றார். அவர்நமக்கு "இரண்டாவது எலிசபெத், இலங்கையின் இராணி" யாக இருக்கின்றார். அதனுல் இலங்கை மக்களும் அவரது ஆட்சி சிறந்து ஓங்குமாறு அன்றுதினம் குன்றாத ஆர்வத்துடன் இறைவன் திருவருளை இரந்துகொண்டமை பெருந்தன்மைக்குரியதே!

மகாராணி எலிசபெத் பல்லாண்டு
வாழ்க!

---

இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்

## 2-ம் ஞாயிறு

—:—

### சுவிசேஷ வாசிப்பு

(லூக். 14: 16—24)

அர்ச். லூக்கா எழுதி வைத்தபடி பரிசுதத சுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக்காலத்திலே யேசுநாதர் பரிசேயசனங்களுக்குத் திருவுளம்பற்றின உவமையாவது: ஒரு மனுஷன் பெரிய விருந்துசெய்து, அநேகரை அழைப்பித்தான். பின்பு அவன், விருந்துவேளையில், இப்பொழுது எல்லாம் தயாராயிருக்கின்றது, அழைக்கப்பட்டவர்கள் வரவேண்டுமென்று சொல்லும்படி தன் ஊழியனை அவர்களிடத்தில் அனுப்பினன். அவர்களெல்லாரும் ஒருப்படப் போக்குச் சொல்லத் தொடங்கினார்கள்; ஒருவன் அவனை நோக்கி: நான் ஒரு தோட்டத்தை வாங்கினேன், அவசியமாய் நான் போய் அதைப் பார்க்கவேண்டும்; ஆகையால், என்னை மன்னித்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றான். மற்றொருவன்: ஐந்து ஏர் மாடு வாங்கினேன், அவைகளைப் பரீட்சிக்கப்போகிறேன்; ஆகையால் என்னை மன்னித்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றான். இன்னுமொருவன்: நான் ஒருபெண்ணை மணமுடித்தேன்; ஆதலால் வரக்கூடாது என்றான். ஊழியன் திரும்பிவந்து, இவைகளைத் தன் எசமானுக்கு அறிவித்தான். அப்பொழுது குடும்பத்தெசமான் கோபமடைந்து, தன் ஊழியனை நோக்கி: நீ சீக்கிரமாகப் பட்டணத்துத்தெருக்களிலும் வீதிகளிலும்போய், ஏழைகளையும் ஊனர்களையும் குருடர்களையும் நொண்டிகளையும் இங்கே அழைத்துக் கொண்டுவா என்றான். பின்பு ஊழியன்: ஆண்டவனே, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று; இன்னும் இடமிருக்கிறது என்றான். எசமான் ஊழியனை நோக்கி: நீ புறப்பட்டு, வழிகளிலும் வேலிகளோரத்திலும் போய், என் வீடு நிறையும்படியாகச் சனங்களை உள்ளே வரும்படி கட்டாயப்படுத்து. ஏனெனில், அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனும் என் விருந்தைச் சுவைபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான் என்று திருவுளம்பற்றினார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

தூத்துக்குடித் தமிழ் இலக்கியக்கழகம்

## கோயமுத்தூர் பேரவை

தமிழுக்கெனப் பலகழகங்கள் தோன்றித் தொண்டாற்றிவந்திருக்கின்றன. இப்பொழுது இக்கழகம் தமிழுக்குப் பெருந்தொண்டு புரிந்துவருவது யாவரும்அறிவர். இக்கழகத்தின் சார்பாகக் கத்தோலிக்க தமிழ் எழுத்தாளர் இரண்டாவது பேரவை மேதிங்கள் 21-ம் நாள்தொடங்கி 24-ம்நாள் மட்டும் கோயமுத்தூர் மேற்றிராணியார் மகாவந். சவரிமுத்து ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. தூத்துக்குடித் துணைமேற்றிராணியாரும், சேலம், வேலூர் மேற்றிராணிமார்களும்,தமிழ்நாட்டிலும் ஈழத்திலுமுள்ள கத்தோலிக்க எழுத்தாளர்பலரும் இப்பேரவையில் கலந்துகொண்டனர். உள்ளூர்ப் பெரியார்பலரும், கிறிஸ்தவ மக்களும் திரளாகக் கூடியிருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

குருமார், கன்னியர், இல்லறத்தார்ஆகிய பலசிறந்த சொற்பொழிவாளர்கள் அப்பேரவையில் கத்தோலிக்க சிந்தனையைப் பரப்பும் வழிவகைகளைப்பற்றிச் சொற்பெருக்காற்றினர். அவர்களில் திரிச்சிராப்பள்ளி அர்ச். சூசையப்பர்கல்லூரிப் பேராசிரியர் திரு. தோமஸ் சீனிவாசன் M. A., L. T., தூத்துக்குடித் துணைமேற்றிராணியார் மகாவந். தோமஸ் பர்னாந்து D. D., D. C. L., கழகச்செயலாளர் வண. சேவியர் தனிநாயகம் அடிகள் M. A., M. Litt., S. T. D., சென்னைப் பல்கலைக்கழகவரலாற்றுத்துறைஆராய்ச்சியாளர் டக்றர். M. ஆரோக்கியசாமி M. A., "நியூலீடர்" ஆசிரியர் வண. ஆ. ஜோ. அடைக்கலம்சுவாமிகள், கோயமுத்தூர் திரு. A. T., அந்தோனிப்பிள்ளை M. A., L.T., கன்னிமேரி பெர்னடு அம்மையார், இலங்கைவித்துவான் F. X. நடராஜாமுதலியோர் மிகக் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

கோயமுத்தூர் கிறிஸ்தவமக்களின் சேவையும், ஒத்துழைப்பும், உண்மைப்பற்றும், உயரிய நோக்கமும் இப்பேரவையில் அவர்கள் செயல்முறையினின்று நன்குஅறியலாம்.

இக்கழகம் தமிழுக்கும், கத்தோலிக்கருக்கும் இதுவரையும் யாரும் ஆற்றாத பலதொண்டுகளை ஆற்றிவருகிறது. 1953-1954-ம் ஆண்டிலும் நல்லூர் சுவாமி. ஞானப்பிரகாசர் ஆராய்ச்சிப்பரிசென ரூபாய் ஆயிரமும், கத்தோலிக்க கதைகளுக்கு முனிசீப்வேதநாயகம் பிள்ளை பரிசென ரூபாய்ஐந்நூறும்,கத்தோலிக்க திருத்தொண்டர்வரலாற்றுக்கு அர்ச். அருளானந்தர்பரிசென ரூபாய் ஐந்நூறும் சமயவேறுபாடின்றிக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறது. விரிவாக விளக்கங்கள் வேண்டுவோர் கழகத்தினின்று அறிந்துகொள்ளலாம்.

---

## அறிவித்தல்

### திரு இருதய வணக்கமாசம்

இலங்கைச் சஞ்சூசையப்பர் சபைச் சந்நியாசர்களில் ஒருவரால் இயற்றப்பட்ட இந்தஅருமையான புத்தகம் திருத்தப்பட்டு, நல்ல கடதாசியிலே திருஇருதயப் படத்துடன் 2-ம் பதிப்பாக மட்டக்களப்பு, கத்தோலிக்க அநாதசாலை அச்சகத்தில் வெளிவந்திருக்கிறது.

விலை: ரூபா 1-00

தபாற்செலவு பிரத்தியேகம். ஒரு டசினுக்கு ஒரு புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

---

## இருளில் ஒளி

தமிழுலகில் திரு. வி. க. என்று பிரஸ்தாபமாக அறியப்படுகின்ற திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் இலங்கைக்கு விஜயஞ்செய்திருக்கும் குன்றக்குடி அடிகளாருக்கு எழுதிய வாழ்த்துச் செய்தியிலே "இருளில் ஒளி" என்னும் தலையங்கத்தின் கீழ் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்.

"கிறித்தவ சமயத்தில் *பாதிரிமார் செய்துவரும் தொண்டு சிறப்பான தொண்டு. கன்னிமார்கள் (NUNS) செய்யும் தொண்டு இன்னும் பாராட்டத்தகுந்தது. சென்னையில் சேத்துப்பட்டிலும், பெங்களூரிலும், (Little Society of the Poor) என்றேற்படுத்தி, 6 வயதுக்கு மேற்பட்ட ஏழைகளுக்கு...... சிறப்பாக, செவிடா, குருடர், இன்ன பிற உறுப்பிழந்தவர்க்கு...... எச்சமயத்தாராக இருந்தாலும்...... உணவுகொடுத்து அவர்களைக் கன்னிமார் பேணிவருகிறார்கள். ஐரோப்பியகன்னியர் உயர்வு, தாழ்வு பாராது அங்குள்ள இந்தியருடைய மலத்தைக்கூட எடுக்கின்றனர். தொண்டுணர்ச்சியின் சிகரம் என்று இது என்மனத்தைக் கவர்ந்தது. இதனாலேயே "இருளில் ஒளி" யில் பின்வரும்பகுதிகளைப் பாடினேன்.

*பாதிரிமார் தொண்டினைப்
பார்முழுதும் பார்க்க; அதை
மாதிரியாக் கொள்ளல் மதி.

* * *

தன்னலம் இன்றியே தாங்கிப் புரிகின்றார்;
கன்னியர் மெய்த்தொண்டைக் காண்.

* * *

எங்கோ பிறந்தனர்; எங்கோ வளர்ந்தனர்;
மங்கையர்க்குத் தொண்டற வாழ்வு.

* * *

இந்தியர் சீழ்மலத்தை ஏந்துகிறார் வெண்ணிறத்தில்;
வந்தபெருங் கன்னியர்கள் வாழ்த்து

இந்தக் கன்னிமார் பொருளை நிதியாகக் சேமிப்பதில்லை. பொருள்சேர்த்தால் கடவுள் நம்பிக்கை மறந்து, "தொண்டு" "வியாபாரம்" ஆகிவிடும். *பாதிரிமாரிடமும் கன்னிமாரிடமும் உள்ள குறைபாடுகளைத் தேடிப் பிடிக்காமல் அவர்களுடைய தொண்டுகளை நாம் பின்பற்ற முயலவேண்டும்."

---

* இந்தியாவிலே கத்தோலிக்க குருமாரையும் சிலர் பாதிரிமார்என்று வழங்குவதுண்டு.

# சுதேச வர்த்தமானம்

### திவ்வியநற்கருணைத் திருநாள்

நம்முடைய ஆசனக்கோவிலிலே திவ்வியநற்கருணைத் திருநாள் ஆனி மாதம் 7-ந் திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவிருக்கிறது. காலை 7 மணிக்குப் பெரியபாடற்பூசை நிறைவேறும். சாயந்தரம் வேஸ்பர்பாடியதும் திவ்விய நற்கருணைநாதரின் திருப்பவனி வழமைபோலப் பத்திச்சிறப்பாய் நடந்தேறும். அன்பின் தேவதிரவியானுமானமாகிய அதிபூசித திவ்வியநற்கருணையில் எழுந்தருளியிருக்கின்ற நமது தெய்வீக அரசர் திருப்பவனிகொள்ளவிருக்கும் வீதிகளை அவற்றின் இருமருங்கும் வசிக்கின்ற கத்தோலிக்கமக்கள் முன்போல அழகுறச் சிங்காரித்து அவாமட்டிலே தமக்குள்ள வணக்க வழிபாட்டைப் பிரசித்தமாகக் காண்பித்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்களாக!

### வணக்கமாச முடிவுவிழா

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே வணக்கமாச முடிவுவிழா சென்ற 31-ந் திகதி ஞாயிறுவாரம் பத்தியருட்சியாகக் கொண்டாடப்படலாயிற்று. அன்று காலை 7 மணிக்கு வண. ஜே. பிரான்சீஸ்சுவாமியவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. சாயந்தரம் வண. பி. ரி. ஜேம்ஸ்சுவாமியவர்களால் வேஸ்பர்பாடி முடிந்ததும் தேவதாயாரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடந்து திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்துடன் விழா பூர்த்தியாயிற்று. வழமைபோலப் பாப்பரசரின் நைற்பட்டவர்த்தனரான சவிரிமுத்துமுதலியாரின் சுற்றத்தவர்களது உபயத்திலே திரு. விக்றர் செருபிம் அவர்கள் முன்னின்று விழாவைச் சிறப்பாக நடத்தலாயினர்.

### வெங்காய இறக்குமதி விலக்கு

பிறநாடுகளிலிருந்து வெங்காய இறக்குமதித் தடையை நீக்கிவிடவேண்டுமென்று அநேக வெங்காய வியாபாரிகள் உணவு – கமத்தொழில் மந்திரி காரியாலயத்துக்கு மனுப் பண்ணியிருக்கின்றனர். ஆனால், அதிகாரிகளோ யாழ்ப்பாணத்தில் நியாயமான பெருந்தொகை வெங்காயம் இன்னுமே கிடைக்கக்கூடியதாய் இருப்பதால் வெங்காய இறக்குமதித் தடையை நீக்கும் விஷயமாய் யாதுமே நடவடிக்கை யெடுக்கும் கருத்துடையோராயில்லை. கட்டுப்பாடான ஒருதொகை விதைவெங்காயம் மாத்திரம் இறக்குமதிசெய்ய அனுமதிக்கப்படுமென்று அதிகாரிஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

### பாடசாலைகளும் சமப்பயிற்சியும்

போதனை, சாதனை ஆகிய இரண்டிலுமே கமத்தொழிலைப் பயிற்றுவதில் மிகவதிகமான கரிசனை எடுக்கப்படவேண்டுமெனக் கல்வி அதிகாரிகள் இலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கெல்லாம் அறிவித்திருக்கின்றனர். பாடசாலைத்தோட்டச்செய்கை, கமத்தொழில்சம்பந்தமான புதியபாட ஒழுங்குத்திட்டம் சென்றவருடம் முதன்முதலாகச் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்தே அவர்கள் இந்த நடவடிக்கையைக் கண்டிப்பாக எடுத்திருக்கின்றனர். இப்புதிய கமத்தொழிற்பாடத்திட்டம் நடைமுறைக்கு வருவதோடு அதிகமதிகமான பாடசாலைகள்— விசேஷமாக உதவிப்பணம்பெறும் பாடசாலைகள் இதுவரை அசட்டை செய்துவந்த இவ்விஷயத்தில் விசேஷ சிரத்தை எடுக்குமென அவர்கள் நம்புகின்றார்கள். இலங்கையிலே பொதுவான உணவுப்பொருள் உற்பத்திப் பெருக்க இயக்கத்தின் ஓர் பகுதியாக வீட்டுத் தோட்டங்கள், பாடசாலைத் தோட்டங்களின் தொகையை அதிகரிக்கச்செய்வது அவசியமாகும்; இத்தகைய ஓர் இயக்கம் வெற்றியடைவது ஆசிரியர்களிலேயே முற்றாகத் தங்கியிருக்கிறது; இலங்கை முழுவதிலும் 3,500 பாடசாலைத்தோட்டங்கள்வரையில் இருக்கின்றன; மாணவர்களது வீட்டுத்தோட்டங்களின் தொகை ஏறக்குறைய 1,40,000 என்று கண்டறியப் பட்டிருக்கிறது எனக் கல்விப் பகுதி அதிகாரி ஒருவர் கூறியிருக்கின்றார்.

### பனங்கட்டித் தொழிற்சாலை

நீர்வேலியிலே காந்திய சேவாசங்க ஆதரவில் அமைக்கப்பட்ட பனங்கட்டித் தொழிற்சாலைத் திறப்புவிழா சென்ற வியாழக்கிழமை நடைபெறலாயிற்று. அவ்வேளை குடிசைக் கைத்தொழில்களின் தலைவர் திரு. ஈ, பி. திசைவீரசிங்கம் அவர்கள் பேசியபோது: குடிசைக் கைத்தொழில்களை விருத்திசெய்வதாலே இலங்கை இறக்குமதிசெய்யும் பொருட்களின் விலையாக வருடந்தோறும் பிறநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற கோடிக்கணக்கானபணத்தில் குறைந்தபட்சம் நூற்றுக்கு 50 விகிதத்தைக் குறைத்துவிடமுடியும் எனக் கூறலாயினர். மேலும் அவர் தொடர்ந்து பேசியவிடத்து: இலங்கையில் நடைபெறும் குடிசைக் கைத்தொழில்களில் பெரும்பாலானவற்றிற்குத் தேவைப்படும் மூலப்பொருள்களில் ஏறக்குறையஎல்லாம் இங்கேயே கிடைக்கக்கூடியனவாய் இருக்கின்றன; இந்த மூலப்பொருள் வளங்களைப் பயன்படுத்தமுன்வருவது சனங்களிலேயே தங்கியிருக்கிறது; சீமெந்துச்செய்கையும் ஓர்குடிசைக் கைத்தொழிலாக இலகுவில் நடத்தப்படக் கூடியது; ஆகக்குறைந்த விலைகொடுத்து யந்திர சாதனங்களை இறக்குமதிசெய்வதிலும் அதிகம் உயர்ந்த சம்பளத்திலே எஞ்சினியர்மாரையும், தொழில் நுட்ப நிபுணர்களையும் வேலை கொள்வதிலும், மிகப்பிரமாண்டமான பணத்தொகையைச் செலவிடவேண்டிய அவசியமேயில்லை; பல்வேறு குடிசைக் கைத்தொழில்களிலும் ஒரு பெருந்தொகையான சனங்கள் ஊக்கமாக ஈடுபடுவார்களாயின் தற்போதய பணநெருக்கடியைச் சமாளித்துவிட முடியும் எனக் கூறிநின்றார்.

---

— இந்தியாவிலிருந்து யானைகளை ஏற்றுமதி செய்வதும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. சென்ற பங்குனியுடன் முடிவான அரசிறைவருடத்திலே 126 யானைகளை ஏற்றுமதிசெய்ய அனுமதிக்கப்பட்டிருந்தது. இதற்கு முந்திய வருடத்தில் 103 யானைகள் ஏற்றுமதியாயின. ஐக்கிய அமெரிக்க தேசமும், ஜேர்மனியுமே அதிகமான யானைகள் வாங்கியிருக்கின்றன.

— எலிசபெத் மகாராணியார் தமது மகுடதாரண தினமன்று உலகில் முன்னொருபோதுமே அறியப்படாத விதமாய் மிகவதிகமாகப் பிரதிமைப் படம் பிடிக்கப்பெற்ற இராணியார் எனும் கீர்த்தியைப் பெற்றிருக்கின்றார். அன்றுதினம் அவரை எத்தனைபேர் எத்தனைமுறை பிரதிமைப்படம் பிடித்தார்களென்று மதிப்பிடவே முடியாதாம்.

— சென்ற 2-ந் திகதியாகிய எலிசபெத் மகாராணியாரின் மகுடாபிஷேக தினமன்று பேர்மிங்காம் நகரில்பிறந்த ஒவ்வோர் குழந்தைக்கும் இரண்டு கினி பெறுமதியான செக் ஒன்று வெகுமதியாக அளிக்கப்படலாயிற்று. மான்செஸ்றர் நகரிலுள்ள கிழவர் கிழவிகளுக்கெல்லாம் ஒவ்வோர் பழக்கூடை வெகுமதிசெய்யப்படலாயிற்று.

தலைமை ஆசிரியர்களுக்கு
அறிவித்தல்

## இலவச மதியப் போசனம்

வித்தியாதிபதியால் உங்களுக்கு அனுப்பப்பட்ட 1953-ம் ஆண்டின் 15-ம் இலக்கச் சுற்றுநிருபத்தின்சார்பாகத் தெரிவிப்பது:.

5-ம் வகுப்புத்தொடக்கம் பாலர் கீழ்ப்பிரிவுவரைஉள்ள எல்லாப்பிள்ளைகளுக்கும் இலவசமத்தியானப் போசனம் கொடுக்கப்படலாம். இப்போது பாவிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட நோசூசியின்படி பாடசாலை நடத்தலாம். அதில் எவ்விதமாற்றமும் செய்யவேண்டிய அவசியமில்லை. இதுசம்பந்தமாக வேறுஏதாவது மாற்றங்கள் இருப்பின் உங்களுக்கு நேரகாலத்துடன் வேண்டியஅறிவித்தல் கொடுக்கப்படும்.

**T. A. J. Mathuranayagam,**
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 3-6-53

## பாடசாலைக்கோணம்

வணக்கத்துக்குரிய பிதாவே!

1. வினு: என்னத்திற்கும் "விசுவாசம்", "விசுவாசம்" என்றே போதிக்கிறீர்கள். தேவன் இருக்கிறார் என்ற உண்மையைப் புத்தியினுலே அறியமுடியாதா?

Vavuniya M. S.

விடை: நன்றாய் அறியலாம். சருவேசுரன் உண்டுபண்ணிய சிருஷ்டிகளே அவர் இருக்கிறார்என்றதற்கு நற்சாட்சிகளாய் இருக்கின்றன. உண்டு பண்ணப்பட்டவைகளின் காரணர் ஒருவர் இருக்கவேண்டுமல்லவா? உண்டாக்கப்பட்டவைகளுள் எவ்வளவோ ஒழுங்குமுறைகள் இருக்கின்றனவே. இந்த ஒழுங்குமுறைகளின்படி அவற்றை நடக்கவைத்தவர் ஒருவர் இருக்கவேண்டும் அல்லவா? உலகில் நடந்துவரும் ஓயாத மாற்றங்களின் மத்தியில் மாற்றமில்லாதஒருவர் இருக்கவேண்டுமே? சிருஷ்டிகளில் காணப்படும் நன்மை, அழகு முதலியனவற்றைப் பூரணமாகக் கொண்டவர் ஒருவர் இருக்கவேண்டுமே? இவரே வேறொருவரிலும் தங்கி நில்லாதவர். இவரையே தேவனென்று அழைக்கின்றோம். மேலும், நன்மை செய்வோர்க்குச் சம்பாவனையும், தீமைசெய்வோர்க்குத் தண்டனையும் விதிக்கும் நன்மைச்சொரூபியாகிய ஒருவர் இருக்கவேண்டுமே. தேவனேயன்றி இவர் வேறுயாராயிருக்கக்கூடும்?

2. வினு: கத்தோலிக்கதிருச்சபை தனதுமக்கள் தாங்களாகவே யோசிக்கவிடாதவண்ணம் தடுப்பதில்லையா?

Kandy C. T. N.

விடை: இல்லை. கத்தோலிக்கமக்கள் பிழையாக யோசியாவண்ணம் திருச்சபைத்தாய் தடுப்பதுண்டு. மற்றப்படியல்ல. பிழையான சுயயோசனையின்படி நடப்பதைப்போன்ற பரிதாபம் வேறில்லை. தேவகற்பனைக்கு இணங்க எமது புத்திசித்தம் பாவிக்கப்படும்படியாகத் திருச்சபை எம்மைத்தூண்டி வழிகாட்டி வருகின்றது என்பது மெய்தான்.

---

## மரணசங்கதி

அச்சுவேலிப் பிரபலஉடையாராக நெடுங்காலம் கடமைபார்த்து இளைப்பாறியிருந்தவரான திரு. வ. சின்னப்பு அவர்கள் விருத்தாப்பியநோய்கண்டு வருந்தி இன்றுகாலை காலஞ்சென்ற துயரசெய்தியறிந்து பெரிதும்மனவருத்தமுற்றோம். இவருடைய பிரேதசேமம் நாளை 5-ந் திகதி வெள்ளிக்கிழமைசாயந்தாம் 5 மணிக்கு நடைபெறுமென அறிகின்றோம்.

R. I. P.

ஸ்ரீமதி கமில்பிள்ளை ஞானமுத்துப்
பிள்ளை அவர்களின்

## தேகவியோகம்

அச்சுவேலியிலே காத்திரமிக்க இராசமடப்பளிக் கோத்திர வழித்தோன்றலாய், சஞ்சூசைமாதவரின் மறைந்த புண்ணியப்பயிராய், மேழிச்செல்வத்துக்குக் கோனுதஆணிச்செல்வமாய் வாழ்ந்துவந்தஸ்ரீமதி கமில்பிள்ளை ஞானமுத்துப்பிள்ளைஏலவே தாம் கூறியிருந்தபடி சென்றவைகாசிமதி 30-ம் தேதி சனிவாரம் கர்த்தரில் மரணநித்திரையாயினு. தேவனிலென்றும் சிந்தையை நிறுத்தித் தாமறிந்தஅளவில் சிறுவர்க்குரிய கபடற்றமனத்துடன் அவரைச் சேவித்துவரும் ஒருகிறீஸ்தவஆத்துமம் எவ்வித கவலையோ, கலக்கமோ சற்றுமின்றிப் பூரணசமாதானம் சாந்தியுடன் மரணத்திரையினுள் மறையுமென்பதைச் ஸ்ரீமதி ஞானமுத்துப்பிள்ளையுடையமரணம் துலக்கமாகக்காண்பித்தது. கர்த்தரில்மரிப்போர் பாக்கியவான்களேயாம். மரித்தவ அச்சுவேலி சஞ். சூசையப்பர்கோவில் சக்கிறிஸ்தாம் வயித்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்களின் ஏகபுத்திரி. உபதேசியாராகவும், உபாத்தியாயராகவும் நாற்பது ஆண்டுகட்குமேற்படச் சிறந்ததொண்டாற்றியபின்னர் இளைப்பாறியிருந்து மரித்த ஸ்ரீ முருகேசபிள்ளை கமில்பிள்ளை யெனும்பெரியாரை இவவிவாகம் செய்திருந்தா. மரிக்கும்போது இவவுக்குவயது 75. யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே கணிக்கப்பேறுடைய தேவதொண்டாற்றிப் பரமபதம் சென்ற குருமுனிவர் வண. எஸ். ஆசீர்வாதம்சுவாமிகளும், அர்ச். கிறகோரியாரின்நைற்பட்டவர்த்தனராகிய ஆசிரியர் பரிமேலர் எஸ். அருளானந்தம் அவர்களும் இவவதுசகோதரர்கள். இவவுக்குஒருபுத்திரரும், மூன்றுபுத்திரிகளும், அநேகபேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகளும்உளர். மறுநாள் ஞாயிறுவாரம் 10-மணிக்கு அந்திம திருச்சடங்கு தொடங்கின. யாழ்ப்பாணத்திலுள்ள பல ஊர்களிலுமிருந்துவந்து குழுமிய இனசனர், சிநேகிதர்கூட்டமாகச்செல்ல, வம்சவரிசைகள்யாவும் முறையேஅமைய, இருவெண்பரிகள் பூட்டிய இரதத்திலிருந்துபேரப்பிள்ளைகளாகிய பலவாலிபர்கள் பேழையையிறக்கி ஓர்அழகிய கேடகத்தில் அமர்த்தித் தூக்கிச்செல்ல, குரவோர் துக்கசங்கீதம் பாடிச்செல்ல, தற்போது மிருசுவில் கட்டளைக்குரவரும், மரித்தவவின் சகோதரருமான வண. எஸ். ஜே. வேதநாயகம்சுவாமியவர்கள் ஈருந்தஆசிகூறிநிற்க, அவவின் மேனி சேமக்காலையிலே மிகஅடக்கத்துடன் அடக்கம்பண்ணப்பட்டது. ஆழ்ந்த தேவபக்தியுடையவவாக, அன்பார்ந்த புத்திரியாக,'சகோதரமாக,மனைவியாக, மாதாவாக,சீரியபந்துவாக இல்லறவாழ்வுக்கோர் பூஷணமாகச்சீவித்து, மறைந்துபோன இவவுடைய ஆன்ம இளைப்பாற்றிக்காகத்தயாபர பராபரனை இரந்து வேண்டுவோம்.

R. I. P. — நிருபர்

### நன்றித் துதிகள்

எனக்கு உண்டானவருத்தத்தைச் சத்திரசிகிச்சையால் அல்லாது மற்றும்படி குணமாக்க முடியாதென்று சொல்லிப் போட்டார்கள். நான் கன்னிசுத்த தேவமாதாவைச் சரணடைந்து அவவின்சலிகையால் இப்போது சத்திரசிகிச்சை இல்லாமலே எனதுநோய் குணமடைந்துவிட்டது. அவவின்நாமம் என்றென்றும் புகழப்படும்படியாக இதைநேர்த்தியின் பிரகாரம் பிரசுரிக்கிறேன்.

R. J. S. மனோன்

---

மருதமடுச் செபமாலை இராக்கினி
னுடையவும், பதுவைப்பதியாகிய அ
அந்தோனியாருடையவும் வேண்
னுல் பலதடவைகளிலே இரத்த
தலினுல் வாதிக்கப்பட்ட என்தா
போது சொஸ்தமடைந்திருக்கிறு
களின்நாமங்கள்எங்கும் புகழப்ப
நேர்த்தியின்படி இதனைப்பிரசுரி
ஓர் அடியான் மூள்ளிக

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அருமைச் சகோதரங்களே!

எங்கள் தாயாரின் வணக்கமாசம் முடிந்து விட்டது. யேசுநாதரின் திருஇருதய வணக்கமாசம் தொடங்கி இருக்கிறது.

யேசுநாதரின் திருஇருதயம் எமக்கு நேசத்தைக் குறிக்கிறது. சருவேசுரனின் அளவில்லாத நேசத்தைக் காட்டுகிறது. பரமபிதாவின் சொரூபமான யேசுநாதர் அந்த நேசத்தின் ஆழநீளத்தைத் தமது பிறப்பிலும், சீவியத்திலும், மரணத்திலும் காட்டுவது மாத்திரம் அல்ல, அன்பின் தேவதிரவிய அனுமானமாகிய தேவநற்கருணையிலும் காட்டுகிறார்.

திருஇருதயம் நிந்தைப் பரிகாரத்தைத் தேடுகிறது. யேசுநாதர் மனிதரை வரம்பின்றி நேசித்தாலும் எம்மில் சிலர் பதில் நேசம் காட்டுகிறார்கள் இல்லை. அது மாத்திரமா? பாவத்தைச் செய்து அதிகம்அதிகம் மனோ வியாகுலத்தை உண்டுபண்ணுகிறார்கள்.

ஆகையால், பிள்ளைகளே! இந்த ஆனிமாசத்திலே திருஇருதயத்தை நேசித்து, பாவப் பரிகாரஞ் செய்யுங்கள். தினமும் பூசை காண்பதினாலும், அடிக்கடி நன்மை வாங்குவதினாலும் உங்கள் நேசத்தையும், நிந்தைப்பரிகாரத்தையும் ஒப்புக்கொடுக்கலாம். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா

## சிரித்து மழை பெய்தது

ஒருஊரில் ஒருஇராசா இருந்தார். அவர் ஒரு இராசகுமாரத்தியைக் கலியாணம் செய்தார். அவர் ஒருநாளும் சிரிக்கவே மாட்டார். அவருடைய அரண்மனையில் ஒருகுருவி கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து வாழ்ந்து வந்தது. ஒருநாள் ஆண்குருவி இரைதேடப் புறப்பட்டது. பகல்நாலு மணிக்குப் போன அந்தக்குருவி மறுநாள் பகல் நாலுமணிக்குத்தான் வந்து சேர்ந்தது.

அதைக்கண்ட பெண்குருவி ஆண்குருவியை நோக்கித் தன்னுடைய பாஷையால் பேசத்தொடங்கி: "கரிக்குருவிக்குக் கண்டாங்கிச் சீலை வாங்கிக் கொடுத்ததும் தெரியும்; பூச்சிட்டுக் குருவிக்குப் பூச்சேலை வாங்கிக் கொடுத்ததும்தெரியும்; நாங்கள் இங்கே பசிபட்டினியாய் இருக்கிறோம்" என்று பேசியது.

இதைக்கேட்டதே ஒருநாளும் சிரியாத இராசா 'ஹா' என்று ஒருகால் சிரித்தார். சிரித்ததே பெருமழை பெய்யத்தொடங்கியது. இராணி இதைக்கண்டு ஏன்சிரித்தீர்கள் என்று கேட்டாள். அவர் ஒன்றும் பேசாமல் இருந்தார். மறுபடியும் கேட்டாள். அதற்கும் அவர் ஒன்றும்பேசாமல் இருந்தார். மறுபடியும் கேட்டாள். அவர்சொன்னார்—நான் அதைச்சொன்னால் என்னுடைய தலை வெடித்துப் போய்விடும்என்று. அவள் சொன்னாள்—நீர் அதைச் சொன்னால் உம்முடைய தலை வெடிக்காது, சொல்லும் என்றாள் நான் நாளை மத்தியானம் சொல்லுகிறேன் என்றார்இராசா.

பிறகு அவர் உலாவிக்கொண்டு போகையில், நான் நாளைக்குத் தலைவெடித்துச் சாகப்போகிறேனே என்று சொல்லித் துக்கப்படும்போது ஒரு பேட்டுக் கோழி தன்குஞ்சுகளுடன் வந்தது. கோழிஇதைக்கேட்டு, இராசாவே, நீர் தலைவெடித்துச் சாகப் போகிறேன் என்று துக்கப்படுகிறீர்; நல்லது, ஒரு புளியங்கம்பு வெட்டி வைத்திருந்து உமது மனைவி ஏன் சிரித்தீர் என்று கேட்டால் அந்தப் புளியங்கம்பால் இரண்டுஅடி போடும்; அவள் கேட்கமாட்டாள்' என்று சொன்னது. இராசா அப்படியே செய்தார். இராணி [illegible]ன்று தொடக்கம் கேட்கவில்லை. [illegible]வரும் நல்ல சுகமாக வசித்துவந்[illegible]ள்

அ. மேரிஅல்பிறற்
நல்லாயன்பெண்பாடசாலை,
மன்னார்.

## சாந்தகுணம் வெல்லும்

நெப்போலியன் சக்கரவர்த்தியின் காலத்தில் நடந்த யுத்தங்களில் பெருந்தொகையான தகப்பன்மார் இறந்து போனார்கள். அதனால் அவர்களுடைய பிள்ளைகள் ஒரு ஆதாரமும் இல்லாமல் அலைந்து திரிந்தார்கள். வியன்னா நகர அப்போஸ்தலர் என்று அழைக்கப் படுகிறவரான கிளெமென்ற் ஒவ்போர் சுவாமியார் இந்தப் பிள்ளைகளுக்கென்று ஒரு பெரிய அனாதசாலை கட்டி அவர்களைத் தாபரிக்கப் பட்டினங்கள் தோறும் திரிந்து தருமம் வாங்குவார். ஒருநாள் ஒரு விடுதியில் மூன்று வாலிபர் கடதாசி விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சுவாமியார் சென்று தருமம் கேட்டார். அவர்களுள் ஒருவன் வேதவிசுவாசம் இல்லாதவன். ஒரு முரடன். அவன் அவருடைய முகத்தில் காறித்துப்பி அவரை மிகவும் நிந்தித்துப் பேசினான். அவரோ சற்றும் கோபங் கொள்ளாமல் தமது சட்டைச் சாக்கிலிருந்த சிறு துணியினால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, "ஐயா! இந்தத் துப்பல் எனக்கு; இனி எனது அனாதைப் பிள்ளைகளுக்கு ஏதும்தருமம் தாரும்" என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்தத் துஷ்டன் கோபந் தணிந்து தான் செய்ததைப் பற்றித் துக்கப்பட்டுத் தனது சட்டைச் சாக்கிலிருந்த எல்லாப் பணத்தையும் எடுத்து அவரிடம் கொடுத்து விட்டான். சில நாட்களுக்குப்பின் அந்த முரட்டு வாலிபன் கிளெமென்ற் சுவாமியாரிடமே சென்று பாவசங்கீர்த்தனம் செய்து முழுதும் மனந்திரும்பி நல்வழிப்பட்டான்.

பிள்ளைகளே! இந்தப் பரிசுத்த குருவானவர் தமது சாந்த குணத்தினால் எப்படி அந்த முரடனின் கோபத்தை வென்றார் என்று பார்த்தீர்கள் அல்லவா? சாந்த குணம் கோபத்தை வெல்லும் என்பது உண்மை என்று இச்சம்பவத்தினால் அறிந்து கொண்டீர்கள். திவ்விய யேசுவும் சாந்த குணத்தை நமக்குத் தமது சீவியத்தினால் படிப்பித்தார். நீங்கள் இந்த நல்ல குணத்தைக் கொண்டிருப்பது கஷ்டம். ஆனால் அதைத்தெண்டித்துக் கொண்டு வரவேண்டும். தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய். சாந்த குணத்தினால் சத்துராதிகளை வெல்லலாம்.

J.S.S.

## அருவி

— I —
பள்ளி முடிந்ததும் பாடிவருகின்ற
பச்சிளம் பாலகன் போல்மகிழ்ந்தே
துள்ளி வருகின்ற வெள்ளிஅருவியின்
தூய அழகினைப் பாடிடுவோம்

— II —
பன்னிறப் பொன்மலர் மேனிபடிந்திடப்
பாங்குடன் ஆடி அசைந்துவரும்
அன்னநடை உடைக் கன்னிஅருவியின்
ஆனந்த கீதத்தைப் பாடிடுவோம்

— III —
ஊனுண்ட நாகத்தைப் போல்வளைந்தேஇங்கு
ஊர்ந்து வருகின்ற தண்ணருவி
காணுந் தொறும்பயிர் தானும்மகிழ்ந்திடும்
காட்சியி லேகளி கூர்ந்திடுவோம்

— IV —
கோல மலைதனில் ஊற்றெடுத்தேபயன்
கொண்டு குவித்திடும் பேரருவி
ஞாலஞ் செழித்திடச் செய்திடல்போல்என்றும்
நாமும் சிறப்பினைச் செய்திடுவோம்

'ஜெயம்'

## காயும் கனியும்

முத்துவைத் தேடிக்கொண்டே கொய்யா மரத்தின்கீழ் வந்தான் மணி. முத்து கொய்யா மரத்திலிருந்து கொய்யாப்பழம் தின்றுகொண்டிருந்தான். அணில்போல மென்றுகொண்டிருந்தான்.

"அடே முத்து! என்னடா செய்கிறாய்? இன்றைக்குத் திருவள்ளுவர் விழாவுக்குப் போக வேண்டுமாடா" என்று மரத்தின்மேல் இருந்த முத்துவைப் பார்த்துக் கொண்டே கேட்டான் மணி.

"அவசியம் போக வேண்டும்; ஒரு நொடியிலே புறப்படுகிறேன் மணி" என்று சொல்லிக் கொண்டே முத்து மரத்தைவிட்டு இறங்கத் தயாரானான்.

"டேய் முத்து! எனக்கு ஒருபழம் பறித்துப் போடடா" என்று மேலே கையைநீட்டிக் கேட்டான் மணி.

மணி நல்லபையன். ஆனால், அவனிடம் ஒரு பெரிய குறைஇருந்தது. மற்றவர்களோடு மரியாதையாக எப்படிப் பேசவேண்டும் என்று அவனுக்குத் தெரியாது. அதனால் மணிக்கு ஒருபாடம்படிப்பிக்க வேண்டும் என்று முத்து விரும்பினான். "இதோ தருகிறேன்" என்று, சொல்லிக்கொண்டே பழங்கள் நிறைந்த கொப்பில் ஏறினான். பெரிய பெரிய பழங்கள் முத்துவுக்குமுன் தொங்கின. மணி அவற்றை நாக்கில் நீர்ஊறப் பார்த்துக்கொண்டிருந்தான்.

முத்துவோ அப்பழங்களைப் பறியாது கைக்கு எட்டாது தொங்கிக் கொண்டிருந்த காய்களைப் பறிக்க முயன்றான். அதைக்கண்ட மணிக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. டேய் முத்து! நீ சுத்த முட்டாளடா" என்றான்.

"ஏன்" என்றான் முத்து.

"நீ முட்டாளே தான். இல்லையென்றால் கண்ணுக்கு முன்னே கைக்கு அருகே இருக்கும் பழங்களை விட்டுவிட்டுக் கைக்கு எட்டாத காய்களைப் பறிப்பாயா?" என்றான் மணி.

அதைக் கேட்ட முத்து தனக்கு வந்த சிரிப்பை விழுங்கிக்கொண்டே "மணி! நீ மகா புத்திசாலி; இந்த உவமையை வைத்துத் திருவள்ளுவரும் ஒருகுறள் பாடி இருக்கிறாரே தெரியுமா?" என்றான்.

மணி முகத்தைச் சுளித்து யோசித்துப் பார்த்தான். புரியவில்லை. "அது என்ன குறள்" என்று கேட்டான்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று"

"அதன் அர்த்தம்?"

"சொல்லுகிறேன் கேள். அதாவது இனிய அழகிய சொற்கள் இருக்கத்தக்கதாகச் சொல்லத்தகாத சொற்களைச் சொல்லுதல் (கண்ணுக்கு முன்னே) கனி இருக்கக் காயைப் பறித்ததைப் போலாம். புரிந்ததா மணி?" என்றான் முத்து.

மணி வெட்கத்தால் தலை குனிந்தான். முத்து கீழே இறங்கிவந்து மணியின் கையில் பழத்தை வைத்தான்.

"முத்து! என்னை மன்னித்து விடு. இனி எப்போதும் எல்லோரிடமும் மரியாதையாகவும், அன்பாகவும் பேசுவேன்" என்றான். மணியின் முகத்தில் ஆனந்தம் பொங்கியது.

'போன்'

## சிறைப்பட்ட தந்தை

நன்றியுள்ள பிள்ளைகள் பெற்றோரின் குறை குற்றங்களை அறிந்திருந்தாலும் அவர்களைக் கனம் பண்ணியே வருவார்கள். இதை விளக்க இங்கு ஒரு சிறு சம்பவத்தை எடுத்துச் சொல்லுகிறேன்.

ஆஸ்திரியா தேசத்தில் யோசெவ் என்னும் சக்கரவர்த்தியின் காலத்திலே, சிறைப்பட்ட குற்றவாளிகளைக் கொண்டு தெருக்களைக் கூட்டித் துப்புரவாக்குதல் போன்ற வேலைகளைச் செய்யும்படி கட்டளையிடுவது வழக்கம். இப்படியே ஒருநாள் சிறைப்பட்ட கைதிகள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அந்தச் சக்கரவர்த்தியோடு சிநேகமாயிருந்த ஒரு துரைமகன் தனது வீட்டுயன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டு நின்றார். அப்பொழுது நல்ல அழகாக உடை தரித்திருந்த ஒரு வாலிபன் அங்கு வேலை செய்துகொண்டிருந்த ஒரு மறியற்காரனுக்குக் கிட்டப்போய் அவனுடைய கையை முத்தமிட்டான். இதைக்கண்ட துரைமகன் அந்த வாலிபனை அழைத்துச் சிறைப்பட்ட ஒருவனை அப்படித் தெருவீதியிலே முத்தமிடுவது சரியில்லை என்றார். வாலிபன் தனதுகண்களில் நீர் பெருக "ஐயா, அவர் என்பிதா" என்றான். இதைக்கேட்ட துரைமகனின் மனம் உருகியது. அவர் இச்சம்பவத்தைச் சக்கரவர்த்திக்கும் அறிவித்தார். சக்கரவர்த்தி அதைக்கேட்டுப் பெரிதும் சந்தோஷப்பட்டு அந்த மறியற்காரனை மன்னிப்புக் கொடுத்து விடுதலையாக்கிவிட்டார்.

அப்போது சக்கரவர்த்தி கூறியதாவது: "தன் மகனை இவ்வளவு நன்றாக வளர்த்த—பெற்றோரில் இவ்வளவு பெரிய பற்றுதல் உண்டாகக்கூடிய

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## வேத வினுவிடை

— VIII —

ஆவியானவர் எங்களை அர்ச்சிப்பவர்

### (4) விவேகம்

(முன் தொடர்ச்சி)

100. அமைச்சலும் அதற்குக் குறைவினுலோ மிச்சத்தினுலோ விரோதமானபாவங்களும் ஆனவை என்ன?

முறையான அதிகாரி நீதியாய்க் கற்பிப்பதைப் பின்பற்றுவதே அமைச்சலாம். அதிகாரிகற்பிப்பதைப் பின்பற்றுமலிருக்கிற அமைச்சலீனமே அமைச்சலுக்குக் குறைவினுல் விரோதமான பாவமாம். அதிகாரி தேவகற்பனைக்குமாருகக் கற்பிப்பதைப் பின்பற்றுகிற அறப்பதுக்கமே அமைச்சலுக்கு மிச்சத்தினுல் விரோதமான பாவமாம்.

"மனிதர்களுக்கல்லச் சர்வேசுரனுக்கே கீழ்ப்படியவேண்டும்"— அப். V. 29.

101. பிறீமேசன் குருட்டு அமைச்சல் வார்த்தைப்பாடு கொடுப்பதும், கிப்நொற்றிச மயக்கத்துக்கு அதன் நோக்கத்தைத் திட்டம்செய்யாமல் சம்மதம்கொடுப்பதும் அறப்பதுக்கத்தைச்சேர்ந்த கனமானபாவங்களா?

ஆம். ஏனெனில், அப்படி வார்த்தைப்பாடு அல்லது சம்மதம் கொடுப்பதினுல் பிறீமேசன் அதிகாரி அல்லது கிப்நொற்றிச மயக்கத்தை உண்டுபடுத்துவோன் கற்பிக்கப்போகிற பாவங்களுக்கு நம்மை ஏற்கனவே பொறுப்பாளிகளாக்குகிறோம்.

102. சந்நியாச அமைச்சல் நேர்த்தியில் அறப்பதுக்கத்துக்கு இடமுண்டோ?

இல்லை. ஏனெனில், அந்தநேர்த்தியினுல் தேவகற்பனைகளையும், சுவிசேஷ புத்திமதிகளையும் நன்றாக அனுசரிக்க உதவுகின்றதும், திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டதும், நம்மால் ஆராய்ந்து பார்க்கப்பட்டதுமான ஒழுங்குக்குக் கீழ்ப்படிய வாக்குப்பண்ணுகிற படியினுலே அதில் அறப்பதுக்கத்துக்குச் சற்றேனும் இடமில்லாததுமன்றி அதனுல் சருவேசுரனிடத்தில் கூடிய பெறுபேறுகளையும் அடைந்து கொள்ளுகிறோம்.

103. விழிப்பும் அதற்குக் குறைவினுலோ மிச்சத்தினுலோ விரோதமான பாவங்களும்ஆனவை என்ன?

நம்முடைய அல்லது நம்மைச் சார்ந்த ஒருகிரியையின் நோக்கத்தையும் தருணத்தையும் கவனித்து, அது நம்மையோ பிறரையோ ஒருதீங்கிலும் விழுத்தாமல் எச்சரிக்கையாயிருப்பதே விழிப்பாம். அப்படி எச்சரிக்கையில்லாமல்இருக்கிற விழிப்பின்மையே விழிப்புக்குக் குறைவினுல் விரோதமான பாவமாம். அறிய உரிமையும் கடமையும்இல்லாத ஒருகாரியத்தைப் பற்றி அறியத்தெண்டிக்கிற பூராயமே விழிப்புக்கு மிச்சத்தினுல் விரோதமான பாவமாம்.

104. சுற்றிவுமவதானம் என்றால் என்ன?

சுற்றிவுமவதானத்தை ஒரு வேற்றுமையான விழிப்புஎன்கலாம். அதாவது விழிப்பு ஒருவெளிக்காரியத்தை நாம் கண்டுபிடிக்கவும் விளங்கிக் கொள்ளவும் பண்ணுகிறது. ஆனுல், சுற்றிவுமவதானமோ மறைக்கவேண்டிய ஒருஉள்காரியத்தைப் பிறர் கண்டுபிடிக்காமலும் பிழையாய் விளங்கிக் கொள்ளாமலும் பண்ணுகிறது.

"மதிகேடன் தன்எண்ணம் முழுதையும் வெளிவிடுகிறான். ஞானவான் அதைப் பின்போடுகிறான்" —பழ. XXIX. 11.

105. யூகமும்அதற்குக் குறைவினுலோ மிச்சத்தினுலோ விரோதமான பாவங்களும் ஆனவை என்ன?

கிரியையை நமது நோக்கத்துக்கும் தருணத்துக்கும் பொருத்தமாய்ச் செய்வதே யூகமாம். கிரியையை அப்படிப் பொருத்தமில்லாமற் செய்கிற யூகமின்மையே யூகத்துக்குக் குறைவினுல் விரோதமான பாவமாம். கிரியையை அணுப்புதல்களினுல் பொருத்தமாக்கத் தெண்டிக்கிற தந்திரமே யூகத்துக்கு மிச்சத்தினுல் விரோதமான பாவமாம்.

106. சூட்சம் என்றால் என்ன?

சூட்சத்தை ஒரு வேற்றுமையான யூகம் என்கலாம். அதாவது, யூகம் நமது நோக்கத்துக்கும் தருணத்துக்கும் பொருத்தமான ஒருகிரியையைச் செய்யப்பண்ணுகிறது. ஆனுல், சூட்சமோ அப்படிப் பொருத்தமில்லாத ஒரு கிரியையைச் செய்யாமல் விடப் பண்ணுகிறது.

"சூட்சமுள்ளவன் தீமையைக் கண்டு ஒளித்துக்கொள்ளுகிறான்; புத்தியில்லாதவன் கடந்துசெல்லவே நாசத்துக்குள்ளாகிறான்"— பழ. XXII. 3.

107. விவேகப் புண்ணியத்துக்கு இசைவான விமரிசைவரம் ஆவது என்ன?

விவேக தீர்மானத்தின்படி, பிசாசின் தந்திரங்களிலும் உலகமாயைகளிலும் மாமிச வஞ்சிப்புகளிலும் நின்று விலகிக்கொண்டு, தேவசித்தத்தையே பின்தொடரத்தக்கதாக ஆவியானவருடைய ஏவுதல்களை ஏற்றுக் கொள்ளப்பண்ணும் நமது பயிற்றுகிற மனசின் பக்குவமே விமரிசை வரமாம்.

108. விவேகப் புண்ணியத்துக்கு இசைவான சாந்தகனி ஆவது என்ன?

ஆவியானவர் நம்மால் விவேகக் கிரியை ஒன்றை உத்தமமாய்ச்செய்து முடிப்பதினுல், நமக்குவருவிக்கும் இன்பமுள்ளபாக்கியமே சாந்தக்கனியாம்.

## உங்களுக்குத் தெரியுமா?

1. ஓர்பாப்பானவர் மாணித்ததும் எத்தனைநாளில் அவரது அடக்கச் சடங்கு நடந்தாகவேண்டும்?

ஒன்பதுநாளில் நடந்தாகவேண்டும்.

2. பன்னிரு அப்போஸ்தலர்களிலும் முதன்முதலாகக் கிறீஸ்துநாதருக்காக மரித்தவர் யார்?

அர்ச். பெரியயாகப்பரே.

3. அதிகம்முந்திய திகதியாகப் பாஸ்குத்திருநாள் வரவேண்டியதினம் எது?

பங்குனி 22-ந் திகதியாகும்.

4. ஐக்கிய அமெரிக்க தேசத்தின் பேர்பெற்ற சுதந்திரசிலையைச் செய்த சிற்பி யார்?

பிறெட்றிக் பர்தால்டி எனப்பெயரிய ஓர்பிரான்சிய கத்தோலிக்கரே. இதைச்செய்துமுடிக்கப் பத்துவருடம் சென்றது. ஒருலட்சம்டலர் செலவாயிற்று.

5. தற்போது திருச்சபையை ஆண்டுநடத்திவருகின்ற 12-ம் பத்திநாதபாப்பரசர் அர்ச். பேதுருவானவரைத் தொடர்ந்துவந்த எத்தனையாவது பாப்பானவர்?

262-வது பாப்பானவர்.

6. அமெரிக்காவிலே எவரால் முதன்முதலாகக் கிறீஸ்துசமயம் கொண்டுசென்று பரப்பப்படலாயிற்று?

1492-ம் ஆண்டு கிறிஸ்தோப்பர் கலம்பஸ்அவர்களுடன் கூடிச்சென்ற மிஷனரிமாரால் பரப்பப்படலாயிற்று.

7. முதல்இருஅணுக்குண்டுகளும் எப்போது, எங்கே போடப்பட்டன?

முதல்அணுக்குண்டு யப்பானிய தேச ஹிரோஷிமாநகரிலும், இரண்டாவதுஅணுக்குண்டு அங்கே நாகாசகிநகரிலும் முறையே 1945-ம்ஆண்டு ஆவணி 6-ந் திகதியும், ஆவணி 9-ந் திகதியும் போடப்பட்டன.

## நாளு சங்கதிகள்

— இத்தாலியிலுள்ள வறிய சந்நியாச ஆச்சிரமங்களுக்கும், ஏகாந்த கன்னிகாமடங்களுக்கும் உதவியாய்ப் பத்துலயர் பெறுமதியான இருதபால் முத்திரைகள் பாவனைக்கு விடுக்கப்படவிருக்கின்றன. இவற்றுள் ஒன்றிலே செபஞ்செய்து கொண்டிருக்கும் மூன்று சம்மனசுகளின் பிரதிமைகளும், இவ்வருடத்திலே ஏழாம் நூற்றுண்டுவிழாக் கொண்டாடப்படவிருக்கின்ற அர்ச். கிளாறம்மாளின் பிரதிமையும் அமைந்திருக்கும்.

— சிக்காகோ நகரின் துணைமேற்றிராணியாரான பேர்னுட் ஷெயில் ஆண்டவரின் மேற்றிராணித்துவ வெள்ளி யூபிலிவிழா விருந்துக்கென்று பத்தரை அடிஉயரமான கேக் ஒன்று செய்யப்படுகின்றது. அந்நகரில் இதுவரை செய்யப்பட்ட கேக்குகளிலெல்லாம் இது மிகப்பெரிதாகும். இதனைச்செய்ய 227 டசின் முட்டைகளும், 265 றுத்தல் சீனியும், 128 றுத்தல் பட்டரும், 14 கலன் பாலும் 248 றுத்தல் மாவும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இதனை அலங்கரிக்க மாத்திரம் மேலும் 70 றுத்தல் சீனி செலவாகும்.

— கம்யூனிஸ்த ஆதிக்கத்திலுள்ள செக்கோசிலவாகியாவின் பகுதிகளிலே தாய் தகப்பன்மாருக்குப் பிள்ளைகள் கடிதம் எழுதும்போது "தோழர் (கொம்றேட்) மம்மா, தோழர் பப்பா" என்று விலாசமிடுவது வழக்கமாகிவிட்டது. பாடசாலைகளிலும் மாணவர்கள் ஆசிரியருக்கும், ஆசிரியர் மாணவர்களுக்கும் "தோழர்" என்று விலாசமிட்டு வருகின்றார்கள். அதனுல், மொருவியாவிலுள்ள பெற்றோர் இதையிட்டுக் கண்டனஞ்செய்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றார்கள்.

— போலாந்திலே லுவோநகர் மேற்றிராணியாரான சிலிப்பி அதிமேற்றிராணியார் ரூஷியரால் விதிக்கப்பட்ட ஏழுவருடச் சிறைத்தண்டனை முடிந்ததும், தாம் இருந்துவருகின்ற சைபீரிய தொழில் முகாமிலே மற்றோர் விசாரணைக்குள்ளாகித் திரும்பப் பதினேழுவருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறாரென்று செய்தி கிடைத்திருக்கிறது தற்போது இவருக்கு வயது 61. இவ்விதம் தண்டனை விதிக்கக் காரணம் சனங்கள் மத்தியிலே இவருக்குள்ள பெருஞ்செல்வாக்கை ஒழித்து விடுவதேயாம்.

— உக்றேயின் நாட்டில் விளைந்திருந்த பயிர்களையெல்லாம் ரூஷியா கைப்பற்றியமையாலே 1933-ம்ஆண்டு உண்டான பெரிய பஞ்சத்தின்போது 60 லட்சம் உக்றேனியர்கள் பசிபட்டினியால் மடிந்தார்கள். இதனை வெளிநாடுகளிலுள்ள உக்றேனியர்கள் இன்றும் ஞாபகப்படுத்தித் துக்கங் கொண்டாடி வருகின்றார்கள்.

— இந்தியாவிலிருந்து வருடந்தோறும் பெருந்தொகையான குரங்குகள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனுல் பெரும் ஆதாயம் கிடைத்துவருகிறது. சென்றவருடம் அங்கிருந்து சுமார் அரைலட்சம் குரங்குகள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாயின. இந்தியாவின் முக்கிய உணவுப் பயிர்களிலே நூற்றுக்கு 5 வீதமானவற்றைக் குரங்குகள் அழித்து வருகின்றனவாம்.

— கார்களுக்கும் மற்றும் பஸ், லொறி முதலாம் மோட்டர் ரதங்களுக்குமான ரியூப் இல்லாத முதலாவது பிரித்தானிய ரையரை டன்லப் றப்பர் கம்பெனி செய்திருக்கின்றது. இது வழமையான ரியூப் ரையரிலும் இருமடங்கு காத்திரமானதாம். விலை அதைப் பார்க்கிலும் நூற்றுக்கு 20 வீதம் மாத்திரம் கூடியதாகும்.

## பாலர்பக்கம்

### சிறைப்பட்டதந்தை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விதமாக வளர்த்த மனிதன் துஷ்டன் அல்ல என்று சொன்னுர். அன்றியும் அந்த வாலிபன் படித்து முடியுமட்டும் அவனுக்கு வேண்டிய செலவை அவர் தாமே பொறுப்பதாகக் கூறினுர். நம்மில் எத்தனைபேர் பெற்றோரைச் சங்கியாமல், அவர்களுடன் சண்டை செய்கிறோம். அவர்களுக்கு அமைச்சலின்றி நடக்கிறோம். அவர்கள் எவ்வளவோ பாடுபட்டு உழைத்து ஊண் உடை தந்து பாடசாலையில் சென்று படிக்க வைக்கிறார்கள். நம்மிலே அன்பாக இருக்கிறார்கள். இவைகளை மறவாது எவ்வளவு கேவலமான நிலையில் இருந்தாலும் அவர்களைச் சங்கித்து நடக்கவேண்டும். மேற்சொன்ன சம்பவத்தில் தகப்பனை மகன் எவ்வளவாக நேசித்தான் என்பதைக் காண்கிறோம் அல்லவா? அந்த நல்ல மகனை நாமும் பின்பற்றி நடந்துவருவோமாக! ஆண்டவர்தாமே "பிதாவையும்மாதாவையும் சங்கித்திருப்பாயாக" என்று ஒரு கற்பனையை நமக்குக் கொடுத்துள்ளார்.

J. S. S.

## சமாதானத்தை ஆசிக்கின்றதா?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சோவியற் அரசுக்கு உலக சமாதானத்தில் விருப்பம்இருப்பது உண்மையே என்றால், அதற்கு ஒருஅத்தாட்சியாக இந்தக்கைதிகளை அவரவர்தாயகங்களுக்குக் கம்யூனிஸ்த ரூஷியா திருப்பி அனுப்ப வேண்டும் என்று அமெரிக்க ஜனதிபதி தமது சரித்திரப்பிரசித்திபெற்ற சித்திரை 16-ந் திகதிச் சொற்பொழிவிலே ஐயந்திரிபற எடுத்துக்காட்டியிருக்கிறார். சோவியற் அரசு அப்படிச்செய்யத் தயாராயிருக்கிறதா? இல்லையானுல், பி[illegible]னர் எதைக் கொண்டுதான் அதன் "சமாதானவிருப்பை"ச் சுதந்திரஉலகம் "அளக்க" முடியும்? சமாதானம்என்பது வாய்ப்பேச்சுக்கும் மேலானது. பேச்சைமெய்ப்பிக்கச் செயல் வெளிப்படவேண்டும் அன்றோ!

## பாலிய குற்றவாளிகளின் பெற்றோரா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றுகள் முற்றிவரக் குடும்பசீவியமே நிலைகுலையத் தொடங்கும். இப்படிப்பட்ட குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் நிலையைச் சற்றுக்கவனிப்போம். அவர்களின்மனதில் கலக்கம்ஏற்படுகின்றது. செய்வதுஇன்னதெனத் தெரியாது பரக்கப்பரக்க விழிப்பர். மனச்சமாதானம் இல்லாததால் தேவபக்தியும், கிறீஸ்துவ அனுசாரமும் கைவிடப்படும். தேவாசீர்வாதம் இல்லாத குடும்பங்களின் நிலையைப்பற்றி அதிகம்யோசிக்க வேண்டியதில்லை.

ஆதலால் எமதுசிறுர்கள் நற்குணசீலராயும், சமூகதொண்டராயும், உத்தமகிறீஸ்தவர்களாயும் வாழவிரும்பினுல் பிள்ளைகளைக் கண்ணும்கருத்துமாகப் பேணிவளர்த்து, நிலைபரத்துக்கு ஏற்றவாறு போஷித்து, உடைகள் கொடுத்து, முக்கியமாய்க் கத்தோலிக்க பாடசாலைகளில் கல்விகற்பித்து, தேவபயத்தில் வளர்த்துவருவோமாக. இப்படிவளர்க்கப்படும் பிள்ளைகள் தேவநேசத்தில் வரவரஉயர்வடைந்து எமது வயோதிகத்தில் ஆனந்தத்தை விளைவிக்கும் உத்தமராய்ச்சீவிப்பதை நாம தப்பாது காண்போம். சுபம்.

## ஆண்டவரே! உமக்குச் சித்தமானல்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"மகனே, அதைப்பற்றி நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்; இப்போது படுத்துறங்கு"

"இல்லைஅப்பா! நாளையத்தினம் எங்கள்வீதியாலே சற்பிரசாத் சுற்றுப்பிரகாரம் வரும்போது, நான் யன்னலில்நின்றுகொண்டுஆண்டவரே! எனக்குச்சுகந்தாரும் என்று அவரைக்கேட்கலாம் அல்லவா? அவருக்குப் பிரியமாயிருந்தால் எனக்குச் சுகம்தருவார் அல்லவா?" என்றுசொல்லிக்கொண்டே கண்ணயர்ந்துபோயினன்.

அப்போது அவன் தந்தைக்கு ஓர்யோசனை பிறந்தது. உடனே தமது மனைவியை அழைத்து, "நாளைச் சுற்றுப்பிரகாரத்துக்கென்றும் எமதுமனையின் முன்பாக ஓர்பந்தல்போட உத்தேசிக்கிறேன்; ஆண்டவர்பேரில் எமது நம்பிக்கையெல்லாம் வைத்தால் அவர் எமதுமன்றாட்டைக் கேட்டருளுவார்" என்று சொன்னர்.

இந்தயோசனைக்கு அவளும் இசைந்து கொடுத்தாள். அதனல் பந்தல்போடுவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யப் பணியாளருக்குக் கட்டளையிடப்பட்டது. இரவிரவாக அலங்காரமான ஓர்பந்தல் போடப்பட்டு அழகேமயமாய் இலங்கியது.

மறுநாள்காலைசூரியனும்தனது சிருஷ்டிகர்த்தா அந்நகர்வீதிகளின்வழியாக ஒட்டோலகமாய் எழுந்தருளவிருப்பதை அறிவிப்பான்போன்று தனதுபொற்கிரணங்களைப் பரப்பிச் சகலபொருட்களையும் பிரகாசிக்கச் செய்தான். கடைசியாக எல்லோரும்ஆவலுடன் எதிர்பார்த்திருந்த திவ்வியசற்பிரசாத சுற்றுப்பிரகாரம் அன்று சாயந்தரம் நாலுமணிக்கு ஆலயத்தைவிட்டுப் புறப்பட்டது. ஆ! அதனை எவ்விதம் வர்ணிப்பது? அஃதுவெற்றிமாலை சூடியஓர்மகாவேந்தர் பரிவார சமேதராய் எழுந்தருளியது போல் எழில் உற்று விளங்கியது. அதிலே பலவர்ணத் துவசங்களும், தூபகலசங்களும், கீதவாத்தியங்களும், பட்டாடைகளும், பொற்சரிகை விதானமும், பக்தர்களின் நீண்ட அணிவரிசையும், நவமணி இழைத்த கதிர்ப்பாத்திரமும் கண்கொள்ளாக் காட்சியளித்தன.

இவ்விதம்வெளிகொண்ட சுற்றுப்பிரகாரம் முன்சொன்ன பாலியனின் மனைக்குமுன்பாகப் போடப்பட்டிருந்த பந்தலை அடைந்தது. அதன்முகப்பில் "ஆண்டவரே! உமக்குச் சித்தமானல், எனக்குச் சுகந்தாரும்" என்று எழுதியிருந்தது. பந்தலின் வலதுபக்கத்திலே நோய்கண்டிருந்த பாலியன் ஓர்நாற்காலியில் அமர்ந்திருக்க, பக்கத்திலே அவன் தந்தை ஓர்மெழுகுவர்த்தியையும்,தாய்ஓர்பூங்கொத்தையும் பிடித்துக்கொண்டு பணியாளருடன் சாஷ்டாங்கமாகவிழுந்து சற்பிரசாதநாதரை வணங்கினர்கள்.

அதேவேளை பாடகர்குழாம் "ஓசலுத்தாறிஸ்" எனும் கீதத்தை — அதாவது, "ஓ! எங்களுக்கு இரட்சணியத்தைத்தந்து மோட்சவாசலைத் திறக்கும் ஒஸ்தியே! எங்களுக்குப் பலத்தைக் கொடுத்து, உதவிசெய்வாயாக" என்று பாடியது. அப்போது பாலியனின் வதனம் இரத்தமயமாக மாறிமலர, அவன்தட்டித்தடவி எழுந்துநின்று, நற்கருணைநாதரைப் பார்த்து, "ஆண்டவரே, உமக்குச்சித்தமானல், எனக்குச் சுகந்தாரும்" என்று கையைக்குவித்துக் கெஞ்சுவான்போல் மன்றாடினன். அதேசமயத்தில் மேற்றிராணியாரும் கதிர்ப்பாத்திரத்தைஎடுத்து ஆசீர்வாதம்அருளினர். அதன்மேல் சுற்றுப்பிரகாரம் பந்தலைவிட்டுப் புறப்படவே, பாடகர்குழாம் "தெதேயும் லாதாமுஸ்" எனும் கீதத்தைப் பாடத்தொடங்கியது. அப்போது நோய்கண்ட பாலியன் ஏதோகுணமடைந்தவன்போல் குதூகல முற்றவனுய்த் தன்னைத் தாங்கிநின்ற தாய்தந்தையரை நோக்கி, "அப்பா, அம்மா,என்னைவிடுங்கள்;நானும் சுற்றுப்பிரகாரத்துடன் போகவிடுங்கள்" என்று துள்ளிக்கொண்டு இரண்டொருஅடிகள் எடுத்து முன்னேவைத்தான்.

அப்போது அவர்கள் அவன் கைகளை இறுகப்பிடித்து எவ்வளவோ தடுத்துப்பார்த்தார்கள். அவனே கேட்கவில்லை. சுற்றுப்பிரகாரத்தைப் பின்தொடர்ந்துகொண்டுசென்றுன். அவர்களும் ஆச்சரியவசத்தராய், ஆனந்தக்கண்ணீர் சொரிந்து,ஆண்டவருக்கு நன்றியறிந்ததோத்திரம் சொல்லிக்கொண்டே சுற்றுப்பிரகாரத்தில் கலந்துகொண்டார்கள்.

இந்தப்புதுமையைப் போல எத்தனையோ புதுமைகள் திவ்வியநற்கருணைச் சுற்றுப்பிரகாரத்தின்போது நடந்திருக்கின்றன. ஆண்டவர் இப்பாலியனுக்குச் சரீர ஆரோக்கியத்தைத் தந்தார். ஆனல், அவர் எத்தனையோ பேருக்கு அவ்வேளை ஆத்தும ஆரோக்கியத்தைத் தந்தருளுகிருர். ஆகையால் அவ்வேளை அவரைப் பார்த்து நமது ஆன்மநோய்களைப்போக்கி ஆரோக்கியந்தருமாறு அவரைஇரந்து மன்றாடுவோமாக!

---

1. அர்ச்சியசிஷ்ட பட்டம் அருளப்பெற்ற முதல் அமெரிக்கர் யார்?

லீமாநகரின் அர்ச். ரோசம்மாளே

2. வேஸ்பேர்ஸ் என்றசொல்லின் அர்த்தமென்ன?

மாலை என்பது. இது வெஸ்பெரு என்ற லத்தீனிய மொழியிலிருந்து பிறந்தது.

3. உலகிலுள்ள கத்தோலிக்கரின் அதிகம்பிந்திய தொகை மதிப்பு என்ன?

1953-ம் ஆண்டுக்கென வெளிவந்துள்ள பிறிற்றுனிக்கா எனும் புத்தகத்திற் கண்டுள்ளபடி உலகிலுள்ள கத்தோலிக்கரின் தொகை 42,55,08,220 பேரென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது உலகின்சனத்தொகையில் ஐந்தில்ஒரு பங்குபேர் கத்தோலிக்கரே.



சதாசகாய மாதாவின் கோணம்

### தேவதாயாரின்
## செப்படி வித்தைக்காரன்

(முன்தொடர்ச்சி)

அங்கே பலவர்ணக் கோணங்கி உடைதரித்த ஒருவர் மிகமும்முரமாகச் செப்படிவித்தைஒன்று செய்துகொண்டிருக்கக் கண்டார்கள். அவர் பலபந்துகளை அந்தரத்தில் எறிந்துகொண்டும், நிலத்தில்விழவிடாது தந்திரமாக ஏந்திக்கொண்டும் நிற்கக் கண்டார்கள். நாகக்கூளிதான் தனது சொந்தஇடத்தை விட்டுவந்து தேவனின்கோவிலில் கையாண்டிபண்ணுகிறதோவென மடாதிபதி சந்தேகித்து, கதவைத்திறந்து "தேவனின்நாமத்தால் சொல்லுகிறேன்; இந்தச்சேட்டையை நிறுத்து" என்று உரத்த சத்தமாய்க் கத்தினர்.

சத்தியம்பண்ணிச் சொன்னலும் சந்நியாசியென்று எவருமே நம்பமுடியாத உடையணிந்திருந்த பிறதர் ஆஞ்சலோ உடனே தமதுசெப்படிவித்தையை நிற்பாட்டினர். அந்தரத்தில் அசைந்துகொண்டிருந்த பந்துகள் நிலத்தில்வீழ்ந்தன. தனதுகெட்டித்தனத்தைக் காட்டவும், தேவதாயாரைச் சந்தோஷிப்பிக்கவுமாகத் தன்குலவித்தையின் திறமையைக் காட்டிக்கொண்டிருந்த பிறதர்ஆஞ்சலோ அசைவற்று மரம்போலநின்றுர். மடாதிபதியைப் பயப்பிராந்தி நிறைந்த கண்களால் ஏறெடுத்துப் பார்த்தார். "பிறதர்ஆஞ்சலோ, இது என்ன? இதுதானு தேவதாய் நேசம்? அவவுடைய சந்நிதானந்தானு உமது கோணங்கிக்கூத்துக்கு உகப்பான இடமெனத் தெரிந்துகொண்டீர்கள்?" என்று மடாதிபதி கோபத்துடன்கேட்டார். பிறதர்ஆஞ்சலோ துக்கத்துடன், சிதறுண்டுகிடந்த பந்துகளை எடுத்துவைத்துக்கொண்டு, "மடத்து அதிபரான குருவே! எனக்குத் தெரிந்தஅளவில் தேவதாயாரை அக்களிப்புக் கொள்ளுவிக்கத் தெண்டித்தேன் அல்லாது வேறென்றுஞ் செய்தேன் அல்லேன். நான் எவர்க்குஞ் சிரிப்புக்குரிய ஓர் கோணங்கியேயென்றும், என்னல் உங்களுக்கு ஒருசுகமோ, தேவதாயாருக்கு ஒருபிரீதியோ இல்லையென்றும் நான் பலகால் சிந்தித்ததுண்டு. மிக்கேல்பிறதர் தன் சித்திரக்கலைத் திறனைக்காண்பித்து மாதாவைமகிழ்விக்கிருர். பிரான்சிஸ்பிறதரின் இனிய கானங்கள் தேவதாயாரின்காதுகளுக்கு இன்பம் பயந்துகொண்டிருக்கின்றன. கபிரியேல்பிறதர் எழுத்தாளர்குழுவில் தலைசிறந்துவிளங்கித் தேவதாயாரைப் போற்றி எழுதும்புத்தகங்கள் பலப்பல. இப்படியே எல்லாப்பிறதர்மாரும் தத்தந்திறனைக் காண்பிக்கின்றனர். இதையோசிக்கும்போது எனது மனதிலும் ஓர்சிந்தனை வந்தது. இங்கு வருமுன் செப்படிவித்தையில் என் திறமையை மெச்சாதவர்கள் இல்லை. ஆகவே, ஆண்டவரின் தாய்க்கு ஆனந்தமூட்டுவதற்காக அடியேனுக்குத் தெரிந்தவித்தைகளில் ஒன்றைக் காண்பித்துக்கொண்டிருக்கும் வேளை நீங்கள்வந்து இடையிற்குழப்பிவிட்டீர்கள்" என்று சொன்னர்.

மடாதிபதி அவரைக்கோபித்துக் கொள்ளாது, அன்போடுதழுவி, அவரைமுத்தமிட்டு "தேவமாதாவின் சின்னக்கோணங்கியே! தேவதாயாரை நேசிக்கவேண்டிய மாதிரியை நாம் இப்போது கற்றுக்கொண்டோம். உடனே உமதுஅறைக்குப்போய் உம்முடைய சந்நியாசஉடைகளை அணிந்துகொள்ளும். இன்னும் இரண்டுகிழமைகளால் உமது வாக்குத்தத்தங்களைக் கொடுக்க உத்தரவிடுகிறேன். தேவனையும், அவருடையதிருத்தாயாரையும் எப்படிநேசிக்க வேண்டுமென நீர் அறிந்திருக்கிறீர்" என்றுசொன்னர்.

பிறதர்ஆஞ்சலோ உத்தமதுறவியாகச் சீவித்து, மரித்து, மோட்சமடைந்து, அங்கேதேவதாயாரின செப்படிவித்தைக்காரனுய்த் திகழுகின்றுர்.

---

## வேம்பின் உபயோகம்

வேம்பின் எண்ணெயைத் தீபங்கட்கு உபயோகிப்பதினல் சகல விதமான தொற்று நோய்களும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும் என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். அதுபற்றியே நம்மில் பிரசவகாலங்களில் பிரதானமாக வேப்பம் எண்ணெயைப் பெய்து தீபமேற்றுவதும், வேப்பம் விதைகளைப் பொடிசெய்து புகையிடுவதுமான வழக்கம் இன்றும நடந்து வருகின்றது. வேப்பமரங்கள் வீட்டருகில் இருப்பதினல் சுரம், தொற்றுநோய் முதலியவை அணுகாவென்று வைத்திய நூல்கள் கூறுகின்றன.

வேம்பின் எண்ணெயை உட்கொள்வதினல் கண்டத்திலுள்ள நோய்கள் நீங்குவதுடன், கண்டத்திலிருந்தெழும் ஒலியும் இனிமையாகவே இருக்கும். அதிகமாகப் பாட்டுப் பாடுவோர் வேம்பின் தளிர்களை அதிகாலையிற் சாப்பிட்டுத் தம் கண்டத்தைச் சுகநிலையில் வைத்திருக்கின்றனர். சன்னி முதலிய நோய்கட்கு வைத்தியர்கள் வேம்பின் சிவப்பேறிய பட்டையையே பெரிதும் உபயோகிக்கின்றனர். இன்னும் கைகால்களில்வரும் வாதம், வீக்கம் என்னும் நோய்களுக்கு வேம்பின் சிவப்பேறிய பட்டைகளைத் தெரிந்தெடுத்து, இடித்துப் பிழிந்து, அடுப்பிலிட்டுக் காய்ச்சி, அதனல் கிடைக்கும் தைலத்தை நோயுள்ள இடங்களில் பூசிவா, அந்நோய் தீயிலிட்ட பஞ்சுபோல் பஸ்மீகரமாகுமென்று அநுபவமுடைய வைத்தியர் கூறுகின்றனர்.

பாண்டு, காமாலை முதலிய வியாதிகளுக்கு அநேகர் வேம்பினின்றும் மதுவையிறக்கி உண்டு, அந்நோய் நீங்கப்பெற்றிருக்கின்றனராம். குளிர், தலைக்கனம், சன்னி முதலிய நோய்களுக்கு வேப்பமரத்தை வாள்கொண்டு அறுப்பதனல் உண்டாகும் 'தூளை'த் தலையணைகளிலிட்டு மேற்கூறிய வியாதிக்காருடைய தலையின்கீழ் வைப்பதினல் அவர்களுடைய நோய்கள் சுகமாகின்றன என்றும் கூறப்படுகிறது. இன்னும் வேப்பம் பூவினல் வடகங்கள் செய்து, குளிர் மிகுந்த காலங்களில் உண்ண, வாயு சம்பந்தம் சற்றுங் கிடையாதெனவே, அறிஞர் அதனைப் பாகஞ்செய்து உண்கின்றுர்கள்.

வேம்பின் இலைகளிலே மின்சார சக்தி இருப்பதினல், அம்மரத்தின் நிழல் மனிதருக்கு மிகவும் சுகத்தைக் கொடுக்கும். வேம்பின் குச்சியைக் கொண்டு பல் விளக்குவதினல், பற்கள் நன்கு துலங்குவதுடன், பற்களில் தாவும் பற்புழு, பற்பேத்தை முதலிய நோய்களும் அணுகாவெனக் கூறுகின்றனர். இத்தேச வைத்தியர்கள், வேப்பங் குச்சி கொண்டு பல் விளக்குவதினல் பெரும்நன்மைகள் உண்டாகுமெனக் கூறியிருக்கின்றுர்கள்.

ச. மு. பிள்ளை

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 4-6-1953